




# தினக்குரல்

யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com






ஓசை : 020 குரல் : 261 செவ்வாய்க்கிழமை 30 நவம்பர் Tuesday 30th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


# எரிபொருள் விநியோக அதிகாரம் இந்தியாவுக்கு வழங்கப்படாது

-கேட்கவும் இல்லை, கேட்டாலும் வழங்கப் போவதுமில்லை - அமைச்சர் உதய கம்மன்பில



(பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்)

எமது நாட்டில் வடக்கு,கிழக்கு உட்பட எந்தப்பகுதிக்குமான எரிபொருள் விநியோகக்கும் அதிகாரம் இந்தியாவுக்கு வழங்கப்படாது. இதனை இந்தியா கேட்டாலும் நாம் வழங்கப்போவதில்லை என வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு ,வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே வலு சக்தி அமைச்சர் உதய கம்பன் பில இவ்வாறு தெரிவித்தார்.

பக்கம் 02

# மண்டைதீவில் கடலில் இரு படகுகள் மூழ்கின

-கடற்றொழிலாளர்கள் பத்திரமாக மீட்பு-



மண்டைதீவு முனைக் கடற்பரப்பில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக இரண்டு மீன்பிடிப் படகுகள் நேற்று மூழ்கின. எனினும் தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

குருநகர் மீனவர்கள் படகுகளில் தொழிலுக்குச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடலில் திடீரென எழுந்த சுழியில் சிக்கி இரண்டு படகுகள் கவிழ்ந்தன. இதனையடுத்து கடலில் குதித்து தத்தளித்துக்கொண்டிருந்த நிலையிலேயே மீனவா்கள் பத்திரமாக மீட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

(ச-40,75)

# சிலிண்டர்களில் கசிவு வீடுகள் தீப்பிடித்தன

-புத்தளம்,கிண்ணியாவில் சம்பவங்கள்

புத்தளம் ஆராச்சிக்கட்டுவ மற்றும் கிண்ணியா - ஆலங்கேணி பகுதிகளில் சமையல் எரிவாயு சிலிண்டர்களில் கசிவு ஏற்பட்டு இரு வீடு தீப்பிடித்துள்ளன



புத்தளம் ஆராச்சிக்கட்டுவ வைரன்கட்டுவ பிரதேசத்திலுள்ள ஓலை வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த சிறிய சமையல் எரிவாயு சிலிண்டரில் கசிவு

பக்கம் 02

-மன்னாரில் எரிவாயு எடுக்கும் வேலைத்திட்டம் -

# இந்தியாவிடம் கொடுங்கள் சீனாவுக்கு கொடுக்க வேண்டாம்

(பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்)

மன்னாரில் எரிவாயு எடுக்கும் வேலைத்திட்டத்தை அரசு இந்தியாவிடமே கொடுக்க வேண்டும். மாறாக சீனாவிடம் கொடுத்தால் கடுமையான எதிர்ப்புக்களை சந்திக்க நேரிடும். இதுவே எமது நிலைப்பாடு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மின் சக்தி அமைச்சு , வலு சக்தி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில்

பக்கம் 02

# கிணற்றுக்குள் விழுந்து பச்சிளம் பாலகன் பலி

இளவாலை – வசந்தபுரம் பகுதியில் கிணற்றுக்குள் தவறி விழுந்த 2 வயது சிறுவன் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(75)

# பொறுப்புக் கூறல் இல்லாது போனதால் இராணுவத்தின் வன்முறை தொடர்கிறது

- கஜேந்திரன் எம்.பி.கண்டனம்

(பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்)

எங்களின் தேசத்தில் கண்டுபிடிக்கப்படும் வளங்கள் மூலம் கிடைக்கும் வருமானம், எங்களின் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்த விடயத்தில் எமது மக்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பக்கம் 02



# மாதகலில் தனியார் காணியை அத்துமீறி ஆக்கிரமிக்க முயற்சி

-மக்கள், அரசியல்வாதிகள் போராடி முறியடிப்பு-

மாதகல் மேற்கு பகுதியில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை ஆக்கிரமிக்கும் நோக்கில் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த அளவீட்டு முயற்சி மக்கள், அரசியல்வாதிகளின் போராட்டத்தை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மாதகல் மேற்கு -ஜே-152 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 16 ஏக்கர் காணியை கடற்படையினரின் தேவைக்கு ஆக்கிரமிப்பதற்கான அளவீட்டு பணிகள் நேற்று மதியம் நில அளவை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவிருந்தது.



பக்கம் 02

# இதுவரை 14 வெடிப்புச் சம்பவங்கள்

(க.பிரசன்னா)



நாட்டில் தொடர்ச்சியாக சமையல் எரிவாயு கசிவின் மூலமான வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்றும் மூன்று வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நவம்பர் மாதத்தில் இதுவரை 14 வெடிப்புச் சம்பவங்கள்

பக்கம் 02

# முன்னர் வெளியில் ஆபத்து இப்போது வீட்டுக்குள் ஆபத்து

அச்சத்துடன் வாழும் மக்கள் -கயந்த கருணாதிலக்க எம்.பி.

(பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்)

யுத்தக் காலத்தில் குண்டுகள் வெடிக்கும் என்று வெளியில் செல்வதற்கு அச்சமடைந்ததை போன்று, இப்போது வீட்டுக்குள் எப்போது எரிவாயு சிலிண்டர் வெடிக்குமோ என்று அச்சத்துடன் மக்கள் வாழ வேண்டியேற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு இந்த அரசாங்கத்தினால் தள்ளப்பட்டுள்ளது. யுத்தம் நிலவிய காலத்தில்கூட இந்தளவுக்கு

பக்கம் 02

# பாண் விலை 100 ரூபா ?

தற்போது பேக்கரி பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், 450 கிராம் பாணை குறைந்தபட்ச விலையாக 100 ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



பக்கம் 02






# வடமராட்சி வலய 3 பாடசாலைகளில் ஆசிரியர், மாணவிகளுக்கு கொரோனா

-யாழில் தொற்று மையங்களாக பாடசாலைகள் மாறும் அபாயம் -

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 3 பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர், மாணவிகள், பாடசாலை விளையாட்டுப் பயிற்றுநர் என கல்விச் சமூகத்தில் பலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றின் அதிபர், மற்றொரு பாடசாலையில் கற்கும் அவரின் இரு பிள்ளைகள், மற்றொரு பிரபல மகளிர் கல்லூரி விளையாட்டு பயிற்றுநர், இன்னுமொரு கல்லூரி ஆசிரியர் என பலருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.



தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பல பாடசாலைகள் வகுப்பறைகளின் இடவசதி மற்றும் சமூக இடைவெளிகளை கருத்தில் கொள்ளாது அனைத்து

பக்கம் 02

# மோசடிகள் குறித்த மேலும் பல திடுக்கிடும் தகவல்கள்

-வெளியிட தயாராகிறார் துஷான் குணவர்தன -



அமைச்சுக்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான மேலும் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் துஷான் குணவர்தன தயாராகி வருகிறார்.

ஏற்கனவே அவர் அம்பலப்படுத்திய வெள்ளைப் பூண்டு மோசடி மற்றும் காஸ் சிலிண்டர் வெடிப்பு விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில் அவரால் மேலும் பல விவகாரங்கள் வெளிவரும் எனக் கருதப்படுகிறது.

பக்கம் 02

## பாண் விலை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் பாரியளவில் கோதுமை மாவிற்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக அச்சங்கத்தின் தலைவரான என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் இரு கோதுமை மா உற்பத்தி நிறுவனங்கள் மாத்திரமே உள்ளன, அந்த நிறுவனங்கள் தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டும், அவ்வாறு செய்ய, டொலர் பிரச்சினையை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக நேற்று ஒரு கிலோ கிராம் கோதுமை மா உள்ளூர் சந்தையில் 18.50 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கோதுமை மாவின் விலை 8 அல்லது 10 ரூபாவாக உயர்த்தப்பட்டது.ஒரு மாதத்துக்கு முன்னர் கோதுமை மா நிறுவனங்கள் 10 ரூபாவால் விலையை உயர்த்தின.

நீரை தவிர, பாண் தயாரிக்க பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களின் விலைகளும் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வடமராட்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களையும் அழைத்து வகுப்புக்களை நடத்துவதாக விமா்சனங்கள் எழுந்துள்ள நிலையில் பாடசாலைகளை மையமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் தொற்று பரவல் தீவிரமடையலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. அத்துடன் காலைப் பிரார்த்தனையில் மாணவர்களை மகிழ்வூட்டும் செயற்பாட்டில் ஈடுபடுமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பல பாடசாலைகளில் சமூக இடைவெளிகளைப் பேணாது, சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது மாணவர்களை வாய்விட்டு பெரிதாக சிரிப்பதற்காக முகக் கவசங்களை அகற்றும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் ஒருவர் தொற்றுக்குள்ளானால் சுவாசம் மூலம் ஏனையோருக்கும் தொற்று பரவக் கூடிய ஏதுகாரணியாக காலைப் பிரார்த்தனையை இடம்பெறுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆசிரியர் மாணவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள போதும் அவற்றை மறைத்து பாடசாலைகளை தொடர்ந்து நடத்திச் செல்லும் போக்கும் காணப்படுகிறது.

அண்மையில் யாழ். நகரப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அதே போன்று புறநகர் பாடசாலையில் மாணவா் ஒருவருக்கு தொற்று உறுதியானது. எனினும் அது குறித்த தகவல்கள் வெளியே கசியாதவாறு பார்த்துக்கொள்ளப்பட்டதுடன், தொடர்ந்து பாடசாலை நடத்திச் செல்லப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (21)

## முன்னர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ முடியாத நிலைமைக்கு மக்கள் முகம்கொடுக்கவில்லை. யுத்தக் காலத்தில் வீதிகளிலும், பஸ்கள் மற்றும் ரயில்களிலும் பயணிப்பதற்கு மக்களுக்கு எங்கே குண்டு வெடிக்குமோ என்று அச்சம் இருந்தது. அதேபோன்று இப்போது வீடுகளில் இருப்பதற்கும் அச்சமாக இருக்கின்றது. எப்போது எரிவாயு வெடிக்குமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. சமையல் எரிவாயு விலையை பாரியளவில் அதிகரித்து எரிவாயு குண்டையும் மக்கள் பக்கத்தில் வீசியுள்ளனர். 2019 ஆம் ஆண்டில் 1493 ரூபாவுக்கு பெற்ற சமையல் எரிவாயு இப்போது 2675 ரூபா வரையில் அதிகரித்துள்ளது.

இந்த எரிவாயு எந்தநேரத்தில் வெடிக்குமோ என்ற பயத்தில் இருக்க வேண்டியுள்ளது. யுத்தக்காலத்தில் வீடு திரும்பும் வரையில் வீதிகளில் ஏதாவது வெடிக்குமோ என்ற நிலைமை இருந்தது. இப்போத வீட்டுக்குள் வெடித்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஒன்று எரிவாயு சிலிண்டனை வெளியில் வைக்க வேண்டும் இல்லாவிட்டால் வீட்டார் வெளியில் இருக்க வேண்டும். இந்த பிரச்சினையின் பாரதூர தன்மையை சிறிதாக எடுக்க வேண்டாம் என்று கேட்கின்றோம். எரிவாயு சிலிண்டர்களின் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றோம் என்றார்.

## இதுவரை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று காலை ஹட்டன் மல்லியப்புச் சந்திப்பகுதியிலுள்ள உணவகமொன்றில் எரிவாயு கசிவினால் வெடிவிபத்து சம்பவமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஹங்வெல்ல, தித்தெனிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று காலை தனது வீட்டிற்கு கொண்டு வந்த எரிவாயு சிலிண்டர் எரிவாயு அடுப்புடன் இணைக்கப்பட்டு சிறிது நேரத்தில் வெடித்து சிதறியதாக ஹங்வெல்ல பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த எரிவாயு சிலிண்டர் கடந்த 24ஆம் திகதி ஹங்வெல்ல பிரதேசத்தில் உள்ள எரிவாயு விநியோகஸ்தர் ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மாரவில, முதுகடுவ, கேரேஜ் வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று எரிவாயு அடுப்பு வெடித்ததில் சமையல் பொருட்கள் பல நாசமாகியுள்ளதுடன், எவருக்கும் காயம் ஏற்படவில்லை என மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் நாட்டில் நான்கு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொல்கசோவிட்ட, சியம்பலாகொடரணவிரு பிறமசிறி மாவத்தையில் உள்ள வீடொன்றின் உரிமையாளர் தாம் கொள்வனவு செய்த எரிவாயு சிலிண்டரில் இருந்து எரிவாயு கசிவு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளதுடன் சிலிண்டரை வீட்டில் இருந்து வெளியே எடுத்து வந்து தோட்டத்தில் திறந்த வெளியில் வைத்துவிட்டு விநியோகத்தருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

ஜா-எல, துடெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இரவு வாயு கசிவு காரணமாக வெடிப்பு நிகழ்ந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளதுடன் பொலிஸிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிகமாக யாழ்ப்பாணம் – கந்தோரடை பகுதி மற்றும் கேகாலை கஹட்டபிட்டிய பகுதிகளில் இரு வேறு சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எரிவாயு நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்படாத எரிவாயு கலவையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் காரணமாகவே நாடு முழுவதும் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

# ஏ.ரி.ஐ. அட்டை மூலம் யாழில் 6 இலட்சம் ரூபா பணம் மோசடி

### -இருவர் குறித்த தகவல் கோரும் பொலிஸார்-

தனிநபர் ஒருவரின் தானியங்கி பணக் கொடுக்கல் வாங்கல் அட்டையை எடுத்து சுமார் 6 இலட்சம் ரூபாய் பணத்தை திருடிய இருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் தேடி வருகின்றனர். அவர்கள் இருவரது ஒளிப்படங்களை வெளியிட்டுள்ள பொலிஸார், சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் வழங்குமாறு பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

உரும்பிராயின் தனிநபர் ஒருவரின் வங்கிக் கணக்கின் தானியங்கி பணப்பரிமாற்றல் அட்டை காணாமற் போன நிலையில் அதனை பயன்படுத்தி அவரது வங்கிக் கணக்கிலிருந்து சுமார் 6 இலட்சம் ரூபாய் நிதி மீளப்பெறப்பட்டுள்ளது.

அதனை அடுத்து குறித்த வாடிக்கையாளர் வங்கியை நாடியதுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் வழங்கினார்.

இதனையடுத்து வங்கியின் உதவியுடன் பணத்தை சுருட்டிய இருவர் தொடர்பான ஒளிப்படங்களைப் பொலிஸார் பெற்றுக்கொண்டனர்.

சம்பவம் இடம்பெற்று சில மாதங்கள் கடந்துள்ள நிலையில் சந்தேக நபர்கள் இருவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இந்நிலையில் அவா்களை கண்டறிய பொதுமக்களின் உதவியைக் கோருவதாக யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பழிகக்கார தெரிவித்தார்.

குறித்த நபர்கள் தொடர்பான தகவல்களை ஏதாவது தெரிந்தால் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் 0718591329 என்ற அலைபேசிக்குத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.(ச-40)

## பொறுப்புக்கூறல் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 27 ஆம் திகதி முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்புக்கு செல்லும் வீதியில் முள்ளிவாய்க்கால் பெயர்பலகையை புகைப்படம் எடுத்த ஊடகவியலாளர் ஒருவர் மீது இலங்கை இராணுவத்தினரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் கண்துடைப்பிற்றாக மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தமிழர்கள் மீது கடந்த காலங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய போர்க்குற்றங்கள் மற்றும் இன வழிப்புக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறல் இல்லாத காரணத்தினாலேயே இந்த சம்பவங்கள் தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கின்றன. எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணைகளை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். அதே போன்று நடந்த சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம் என்றார்.

இதேவேளை மின்சார சபையினால் வடக்குக் – கிழக்கில் வீதி விளக்குகளை பொருத்தும் போது, ஒரு விளக்கொன்றுக்கு 3100 ரூபா தொடக்கம் 3400 வரையிலும் அறவிடப்படுகின்றது. அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ வந்திருந்தபோது இதுபற்றி கூறிய போது, தமது பிரதேசங்களில் இவ்வாறு அறவிடப்படுவதில்லை என்று கூறியுள்ளார். பழுதடைந்த மின்குமிழை மாற்றும் போதும் அந்தத் தொகை அறவிடப்படுகின்றது. அதனால் பிரதேச சபைகள் திருத்தும் பணிகளுக்காக மின்சார சபையின் அனுமதியுடன் தமது ஊழியர்களை சட்டத்திற்கு மாறாக ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால் பிரதேச சபைகள் ஆபத்தில் சிக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன. அத்துடன் கைத்தொழில் முயற்சியாளர்கள் மின் இணைப்புக்காக விண்ணப்பிக்கின்ற போதும். 6 மாதங்கள் கடந்தும் அது வழங்கப்படாது இருக்கின்றன. இதில் அரசியல் காரணங்கள் இருக்கின்றனவா? அழுத்தங்கள் இருக்கின்றனவா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. தயவு செய்து இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு கேட்கின்றேன் என்றார்.

இதன்போது சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கூறுகையில்.

நான் நீங்கள் கூறிய விடயம் தொடர்பில் தற்போது ஆராய்ந்தேன். இனம், மதம், பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு மின்சார சபையினர் செயற்படுவதில்லை. மின்சார சபை ஒரே சட்டத்தை ஒரே முறையில் முன்னெடுக்கும் நிறுவனமாகும். இதனால் சம்பவங்களை கூறினால் தேடிப் பார்க்கலாம் என்றார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய கஜேந்திரன் எம்.பி குறிப்பிடுகையில்,

மன்னாரில் எரிசக்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் நாட்டின் கடனை அடைக்க முடியும் என்ற கருத்து வலுச் சக்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ளது. அது நல்ல விடயமே. எங்களின் தேசத்தில் கண்டுபிடிக்கப்படும் வளங்கள் மூலம் கிடைக்கும் வருமானம், எங்களின் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட வேண்டும். எமது மக்கள் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமை தொடரக்கூடாது. இல்மனைட் அகழப்படுகின்றது. அதனால் கிடைக்கும் வருமானம் முழுவதும் அந்தப் பிரதேசங்களுக்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலைமை தேசங்களுக்கு இடையே இடைவெளியையே அதிகரிக்கும் என்றார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கூறுகையில்,

இந்த நாட்டில் உள்ள வளங்கள் நாட்டு மக்களுக்கே உரியது. பிரதேசங்கள் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் இனம், பிரதேச அடிப்படையில் ஒதுக்க முடியாது. ஆனால் அந்தப் பிரதேசத்திற்கு விசேட அந்தஸ்து வழங்குவது அனைவரும் கலந்துரையாடி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் பிரதேச அடிப்படையில் அவற்றை ஒதுக்க முடியாது இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## இந்தியாவிடம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வலுசக்தி அமைச்சர் உதய கம்பன் பில தனது கருத்துக்களை வெளிப்படையாக சொல்பவர். மன்னாரில் இருக்கின்ற எரிவாயு மூலம் இந்த நாட்டின் கடனை அடைக்க முடியுமென தெட்டத் தெளிவாக தனது கருத்தை தெரிவித்திருந்தார். நாங்கள் மன்னாரை சார்ந்தவர்கள். எங்களுடைய பிரதேசத்தில் எரிவாயு இருக்கின்றது என்பது பெருமைப்படக்கூடிய விடயம். அதேவேளை இதனால் மக்களுக்குள்ள நன்மைகள் என்ன என்பது தொடர்பிலும் இந்த விடயத்தை கையாள யாருக்கு, அதாவது எந்த நாட்டுக்கு கொடுக்கப் யோகின்றீர்கள் என்பதும் கேள்வியாகவுள்ள விடயம். இது தொடர்பில் நீங்கள் வெளிப்படையாக சொல்ல வேண்டும்.

சீனா என்றால் யாருமே பேசமாட்டார்கள். சீனா சம்பந்தமாக என்ன நடந்தாலும் கருத்துக்களை சொல்வதில் ஆளும் கட்சி மௌனமாகவே உள்ளது. ஆனால் இந்தியா,அமெரிக்கா என்றால் துள்ளிக்குதிக்கின்ற ஒரு செயற்பாடு காணப்படுகின்றது.

எங்களைப் பொறுத்த மட்டில் இந்த எரிவாயு உற்பத்தியை பெருக்குவதற்கான ஒரு வேலைத்திட்டத்தை நீங்கள் செய்வதாக இருந்தால் அது இந்தியாவிடமே கொடுக்கப்பட வேண்டும் என்பதனை ஆணித்தரமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். அதனை விடுத்து சீனாவிடம் கொடுப்பதாக இருந்தால் அங்கே நீங்கள் எதிர்ப்புக்களை சந்திக்க வேண்டி வரும் என்பதனையும் நான் இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இது எச்சரிக்கை அல்ல. இது தான் உண்மை .யதார்த்தம்.

இந்த எரிவாயு எடுக்கும் வேலைத்திட்டத்தை இந்தியாவிடம் கொடுத்து அதன் மூலம் கிடைக்கின்ற நன்மைகளை இந்த நாடு அனுபவிக்க வேண்டும் என்றார்.

## மோசடிகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெய்லி மிரர் மற்றும் லங்காதீப ஊடகங்கள் சனிக்கிழமை தொகுத்து வழங்கிய சமூக ஊடக கலந்துரையாடலின் போது, பல அமைச்சுக்களில் இடம்பெற்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் காரணமாகவே நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து தான் விலகியதாக துஷான் குணவர்தன குறிப்பிட்டார்.

பதவி விலகி வெளியே வருவதன் மூலம் அரச நிறுவனங்களில் நடைபெறும் சட்டவிரோத செயல்களை அம்பலப்படுத்த முடியும். இதன் மூலம் பொதுமக்களுக்கு மேலும் பல நன்மைகளைச் செய்ய முடியும் என உணர்ந்ததாக அவர் கூறினார்.

சரியான நேரத்தில் அரச நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகளின் முறைகேடுகள் குறித்த மேலும் பல தகவல்களை நான் வெளியிடுவேன். அந்த அனைத்து தகவல்களையும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கவுள்ளேன் எனவும் துஷான் குணவர்தன தெரிவித்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு அமைச்சரின் அரசியல் பணிகளுக்காக பொது நிதியை விடுவிக்குமாறு அமைச்சு ஒன்று கோரியதாகவும், அதற்கு உடன்பட தான் மறுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கையை நடைமுறைப்படுத்தவே நான் பதவிக்கு வந்தேன். எந்தவொரு அமைச்சருக்கும் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்ற நான் பதவிக்கு வரவில்லை என அவர் குறிப்பிட்டார்.(ச)

## சிலிண்டர்களில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டு வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது. இது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், கசிவு ஏற்பட்ட இந்த சமையல் எரிவாயுவினால் எவ்விதமான சேதங்களும் ஏற்படவில்லை எனவும் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்து வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், இந்த சிலிண்டரிலிருந்து கசிவுடன் தீப்பிடித்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து, உடன் செயற்பட்ட வீட்டார் அந்த சமையல் எரிவாயுவை உடனடியாக இழுத்தெடுத்துச் சென்று கழிவுநீருக்குள் வீசியுள்ளனர்.

இவ்வாறு செயற்பட்டமையினால் உயிர்ச் சேதங்களோ அல்லது சொத்துக்களுக்கு சேதங்களோ ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா - ஆலங்கேணி பாடசாலை வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் பகல் சமைக்கும் போது எரிவாயு அடுப்பு வெடித்து தீப்பற்றியுள்ளது இதனால் வீட்டிலிருந்தோர் வெளியில் ஓடி பிறரின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர். சமையல் எரிவாயு சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த அடுப்பு வெடித்துச் சிதறியதினால் ஏற்பட்ட தீயால் வீட்டு ஜன்னல் எரிந்துள்ளது.இதனால் வீட்டிலிருந்தோர் வெளியில் ஓடி பிறரின் உதவியுடன் தீயை அணைத்துள்ளனர். எனினும் எவருக்கும் எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.

## மாதகலில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த இடங்களில் ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனையடுத்து காணி அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக கைவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றனர்.

## எரிபொருள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எழுந்து, நான் வலுசக்தி அமைச்சரிடம் ஒரு தெளிவுபடுத்தலை பெற விரும்புகின்றேன். இலங்கைக்கு எரிபொருள் விநியோகிக்கும் உரிமையை இந்தியாவுக்கு வழங்கி இந்தியாவிடமிருந்து 3.5 பில்லியன் டொலரை இலங்கை கடனாக பெற்றுக் கொள்ளவுள்ளதாக அரசு சார்பான ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது உண்மைதானா? அந்தக்கடனைப் பெறுவதற்காகவா நிதி அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்? இது தொடர்பில் உங்களால் தெளிவுபடுத்த முடியுமா எனக்கேட்டார்.

இந்தக்கேள்விக்கு வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதிலளிக்கும் போதே எமது நாட்டில் வடக்கு,கிழக்கு உட்பட எந்தப்பகுதிக்குமான எரிபொருள் விநியோகிக்கும் அதிகாரத்தை இந்தியா எம்மிடம் கேட்கவும் இல்லை. இந்தியா கேட்டாலும் நாம் வழங்கப்போவதுமில்லை. உங்கள் தரத்தில் எம்மை ஒப்பிட வேண்டாம் என்றார்.

# கொழும்பிலிருந்து ரயில் மூலம் காங்கேசன்துறைக்கு எரிபொருள்

## -விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்- எம்.பி. சார்ள்ஸ்

பா. கிருபாகரன் - ந ஜெயகாந்தன்

கொழும்பிலிருந்து நேரடியாக ரயில் மூலம் காங்கேசன்துறைக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுத்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. யான சார்ள்ஸ் நிர்மலநாதன் ,எரிபொருள் விலை அதிகரிப்பு மக்களுக்கு பெரும் சுமையாக அமைந்திருப்பதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மின்சக்தி அமைச்சு ,வலுசக்தி அமைச்சு ஆகியவற்றின் நீதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போது கொழும்பிலிருந்து வடக்கிற்கான எரிபொருட்கள் பவுசர்கள் மூலமே காங்கேசன்துறையிலுள்ள எரிபொருள் விநியோக சாலைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் வீண் செலவுகளும் கால தாமதங்களும் ஏற்படுகின்றன. எனவே கொழும்பிலிருந்து நேரடியாக ரயில் மூலம் காங்கேசன் துறைக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் .இதன் மூலம் செலவுகள் குறைவதுடன் கால தாமதமும் தவிர்க்கப்படும்.

அதேவேளை எரிபொருட்களின் விலைகள் தொடர்ந்தும் அதிகரிக்கின்றன. இது மக்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது. அரசு தமக்கு எதாவது நிவாரணத்தை வழங்கினால் மட்டுமே எரிபொருள் விலை அதிகரிப்பை தவிர்க்கலாம் என அமைச்சர் உதய கம்பன்பில தெரிவித்துள்ளார். எனவே அரசு அமைச்சுக்கு ஏதாவது நிவாரணங்களை வழங்கி எரிபொருள் விலைகளை அதிகரிக்காதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை காற்றாலை மினி நிலையம் பிரதம மஹிந்த ராஜபக்சவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது பிரதமர் அனுராதபுரம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமென வாக்குறுதியளித்திருந்தார். வவுனியா முல்லைத்தீவு மன்னர் மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்குஇதுவரை எந்தவொரு நியமனம் வழங்கப்படவில்லை. அனுராதபுரத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சை நடந்தது. எனவே பிரதமரின் வாக்குறுதி பொய்யா என்ற கேள்வி எழுந்துள்ளது . எனவே இது தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

இங்கு பல குடியேற்ற கிராமங்கள் உள்ளன. இவ்வாறான கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை இல்லை. இவ்வாறான கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# யாழ். மாநகர சபை முதல்வர் ஜேர்மன் தூதுவர் சந்திப்பு



இலங்கை நாட்டுக்கான ஜேர்மன் தூதுவர் Holger seubrt க்கும் யாழ். மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ். மாநகரசபை முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில், தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையாகவுள்ள சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பெற்றுக்கொள்வதற்கும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பு உட்பட்ட அநீதிகளுக்கு நீதியை பெற்றுகொடுப்பதற்கும் ஜேர்மன் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்ற கோரிக்கையை தூதுவரிடம் முதல்வர் முன்வைத்துள்ளார்.

மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சிறப்பு தீர்ப்பாயம் ஒன்றிற்கு குறித்த விடயங்கள் பாரப்படுத்தப்பட வேண்டும் என்றும் முதல்வர் வலியுறுத்தினார்.

மேலும் யுத்த அழிவில் இருந்து மீண்டுவரும் எமது பிராந்திய அபிவிருத்திக்கும் ஜேர்மன் உதவ வேண்டும் என்றும் யாழ்.மாநகர சபைக்கும் ஜேர்மனின் பிரதான நகரங்களுடன் இரட்டை நகர் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு இணைந்து செயற்படுவதற்கும் உதவ வேண்டும் என்றும் முதல்வர் தூதுவரிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

அத்துடன் முதல்வரால் தூதுவருக்கு நினைவுச்சின்னம் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டது.(75)

# ஒமிக்ரான் பரவுவதை தடுப்பதற்கு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கங்கள்

## -எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

'ஒமிக்ரோன்' கொவிட் புரழ்வு இலங்கைக்குள் பரவுவதை தடுப்பதற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

நவம்பர் 26 ஆம் திகதி உலகச் சுகாதார தாபனம் அவசர கூட்டமொன்றை நடத்தி 'ஒமிக்ரோன்' என்ற கொவிட் பிரழ்வை கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாக அறிவித்துள்ளனர். இதற்கு முன்னரும் பல்வேறு பிரழ்வுகள் தொடர்பிலும் அறிவிக்கப்பட்டிருந்தது. புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள ஒமிக்ரான் மிகவும் வேகமாக பரவக் கூடியது என்று சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புதிய சவால்களை சுகாதாரத்துறை முகம்கொடுக்க வேண்டி வந்துள்ளதாகவும் உலக சுகாதார தாபனம் கூறியுள்ளது. இந்நிலையில் இந்தப் பிரழ்வு நமது நாட்டுக்குள்ளும் வரும் அபாயம் காணப்படுகின்றது. அது தொடர்பாக நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும். இந்த வைரஸ் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் நோய்நிலைகளில் இருப்போரையும் மற்றும் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களிடமும் பரவும் அபாயம் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.


தடுப்பூசி போட்டிருந்தாலும் நோயெதிர்ப்பு சக்தி குறைவடையும் நிலைமை உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் இது தொடர்பில் சுகாதார விசேட நிபுணர்கள் பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

பிரதானமாக நாட்டுக்குள் நுழையும் போது, தடுப்பூசி போட்டுள்ளமையை கவனத்தில் கொள்ளாது, அனைத்து பயணிகளையும் பீசீஆர் பரிசோதனையை நடத்த வேண்டும். அவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை போட்டிருந்தாலும் அவர்களை அந்தப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். இதேவேளை 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் தடுப்பூசியை வழங்க வேண்டும். அத்துடன் 20 வயதுக்கு மேற்பட்ட நோய் அவதானம் உள்ளவர்களுக்கும் அந்தத் தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தடன் ஏற்படக் கூடிய துரதிஸ்டவசமான நிலைமை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்பதுடன், கைகழுவுவதை மாத்திரமன்றி முகக் கவசத்தை அணிதல் உள்ளிட்டவற்றை பின்பற்ற வேண்டும்.

புதிய வைரஸ் பிரழ்வானது வேகமாக பரவும் வைரஸாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இது குறித்து அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் என்றார்.

# யாழில் பாண் விலை 85 ரூபா ஏனைய விலைகள் உயராது



யாழ்.மாவட்டத்தில் பாணின் விலையை 10 ரூபாவினால் அதிகரித்து 85 ரூபாவாக விற்பதெனவும் ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கங்களுடன் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் பாணின் உற்பத்தி மற்றும் விலை தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் கோதுமை மாவின் விலை அதிகரித்ததன் காரணத்தால் 450கி பாணின் விலை 10 ரூபாவினால் அதிகரித்து 85 ரூபாவாக விற்பனை செய்ய உடன்பாடு எட்டப்பட்டது. ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது என யாழ்.மாவட்டச் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (40,21)

# விசேட தேவையுடையோருக்கான சிறப்பு பாடசாலையாக 'சிவபூமி'

## -தேசியமட்டத்தில் முதலிடத்தில்-



தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தினைப் பெற்ற கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையை கௌரவிக்கும் விஷேட நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான பாடசாலைகளில் முதலாம் இடத்தினை நிலைநாட்டி கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை விருதினை வியாழக்கிழமை பெற்றிருந்தது. இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், சிவபூமி பாடசாலை அதிபர் கலைவாணி குகதாஸன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலர், பிரதேச செயலக கலாசார உத்தியோகஸ்தர்களின் மாணவர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.(40)

# மக்களின் உயிர்களுடன் விளையாடும் அதிகாரிகளை கைது செய்ய வேண்டும்

## -பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

சமையல் எரிவாயுவில் கலக்கப்பட்டிருக்கும் பியூட்டன் மற்றும் புரோபேன் ஆகிய இரசாயன வாயுவின் கொள்ளவு தொடர்பில் பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களின் உயிர்களுடன் விளையாடும் அதிகாரிகளை கைது செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை சமையல் எரிவாயு பிரச்சினை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தரப்படுத்தல் நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களினால் எரிவாயுவில் அடங்கும் பூட்டேன் மற்றும் புரோப்பைன் கொள்ளளவு தொடர்பில் நிர்ணம் செய்யவில்லை என்று அமைச்சர் கூறுகின்றார். உங்களின் முன்னாள் தலைவர் அணில் கொஸ்வரத்த, நுகர்வோர் விவகார அமைச்சர் மற்றும் பணிப்பாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கடிதத்தை அனுப்பியுள்ளார். அதன் கொள்ளளவு தொடர்பில் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் மாதத்தில் இருந்து கொள்ளளவில் மாற்றம் செய்துள்ளனர்.

இந்நிலையில் லிற்றோ நிறுவனம் 80க்கு 20 என்ற வகையில் அவை இருப்பதாக கூறுவதுடன், நுகர்வோர் அதிகார சபை 50க்கு 50 வீதம் அவை இருப்பதாக கூறுகின்றனர். இந்நிலையில் கொள்ளளவு தொடர்பில் கூறப்படவில்லை என்று அமைச்சர் கூறுகின்றார். இது பாரதூரமான குற்றமாகும்.

இதனால் அதிகாரிகள் தொலைகாட்சிகளுக்கு முன்னால் வந்து பொய் கூறுவதை நிறுத்த வேண்டும். பாரதூரமான குற்றத்தையே அவர்கள் செய்கின்றனர். அதிகாரிகளை சீஐடிக்கு அழைக்க வேண்டும் என்பதுடன் அவர்களை கைது செய்யவேண்டும். அவர்கள் மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுகின்றனர் என்றார்.

# இந்தியாவுடனான உடன்படிக்கையில் இருக்கின்ற விடயங்கள் என்ன ?

## -அனுரகுமார திசாநாயக எம்.பி.கேள்வி-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

திருகோணமலை எண்ணெய் குதங்கள் குறித்தது இந்தியாவுடன் உடன்படிக்கை செய்துகொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அந்த உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் என்ன என்பது குறித்த தகவல்களை வெளியிட வேண்டும் என்றும், மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அனுரகுமார திசாநாயக சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் மின்சக்தி மற்றும் எரிச்சக்தி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல், கப்பம், குடும்ப வியாபார டீல்கள் காரணமாக நாட்டிற்கும், பொருளாதாரத்திற்கும் ஏற்படுத்திக்கொடுத்துள்ள நாசத்தின் பிரதிபலிப்பே பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட அழிவாகும்.

திருகோணமலை எண்ணெய் குதங்களுக்கு என்ன நடந்துள்ளது? மீள பெற்றுக்கொள்வதாக கூறினீர்கள், அவற்றிற்கு என்னவானது? அண்மையில் அமெரிக்க நிறுவனம் ஒன்றிடம் கடன் பெற தீர்மானிக்கப்பட்டது. கடனுக்கான வட்டி 3 வீதம், ஆனால் தரகுப்பணம் 7 வீதம். அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.நெருக்கடிக்கு மத்தியிலும் ஊழல் செய்யவே அரசாங்கம் முயற்சித்துள்ளது.

அதேபோல் இந்தியாவிடம் பேச்சுவார்த்தை நடத்தி 500 மில்லியன் டொலர் கடன்களை பெற்று எரிபொருள் இறக்குமதி செய்யும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார். அதே வேளையில் திருகோணமலை எண்ணெய் குதங்கள் குறித்த உடன்படிக்கை செய்துகொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.ஒ.சி நிறுவனத்துடன் செய்துகொள்ளவுள்ள உடன்படிக்கை என்ன என்பதை சபைக்கு தெரிவிக்க வேண்டும். 2003 ஆம் ஆண்டு தற்காலிக உடன்படிக்கை செய்துகொள்ளபட்ட போதிலும் எண்ணெய் குதங்கள் எமக்கு உரித்தானது. இவ்வாறு நாடுகளுக்கு வளங்களை விற்பதானால் நாம் மிகப்பெரிய அழிவை சந்திக்க நேரிடும் என்றார்.

# தெல்லிப்பழையில் 41 மி.மீ மழைவீழ்ச்சி பதிவு



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை-08.30 மணி முதல் நேற்றுத் திங்கட்கிழமை காலை -08.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழையில் 41 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் அச்சுவேலியில் 31.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் பருத்தித்துறை, சாவகச்சேரி, திருநெல்வேலி, நயினாதீவு, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளில் 30 மில்லிமீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (18)

# எரிபொருள் பற்றாக்குறையால் மின்வெட்டு ஏற்பட வாய்ப்பில்லை

## -அமைச்சர் உதய கம்மன்பில-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

எரிபொருள் பற்றாக்குறையால் மின்வெட்டு ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று வலுச் சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை, நாட்டின் நிதி நெருக்கடியால் வலுச் சக்திக்கு பாதிப்பு ஏற்பட்டு நாட்டில் மின் தடை ஏற்படக் கூடுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அமைச்சர் மேலும் கூறுகையில்,

அந்நிய செலவாணி நெருக்கடியால் மின்வெட்டு ஏற்படும் என்று முன்னாள் பிரதமர் கூறியுள்ளார். சாதாரண நிலைமையில் அவ்வாறு நடக்க இடமிருந்தது. ஆனால் நாங்கள் கடந்த 15 ஆம் திகதி சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடும் போது, 79000 மெற்றிக் தொன் உராய்வு எண்ணெய் எமது களஞ்சியத்தில் இருந்தது. தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் நீர்மின் உற்பத்தி 55 வீதம் வரையில் அதிகரித்துள்ளதால், இப்போது உராய்வு எண்ணெய்க்கு கேள்விகள் கிடையாது. இன்னும் எமது களஞ்சியத்தில் அவை உயர்வாக இருக்கின்றன. எப்போதாவது மழை நின்றாலும் 40 நாட்களுக்கு மின் உற்பத்திக்கு தேவையான உராய்வு எண்ணெய் எங்களிடம் இருக்கின்றது. ஆனால் விரைவில் மீண்டும் சுத்திகரிப்பு நிலையத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். இதனால் எரிபொருள் பற்றாக்குறையால் மின்வெட்டு ஏற்படுவதற்கு காரணமில்லை.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
செவ்வாய்க்கிழமை 30 நவம்பர் 2021 Tuesday 30th November 2021

## புவிசார் அரசியல் நலன்களை முன்னிலைப்படுத்தும் போக்கு

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் மெய்நிகர் ஜனநாயக மாநாடொன்றை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்வரும் டிசம்பர் 9-1 இல் நடத்தவிருக்கும் அதேவேளை,அந்த நிகழ்விற்கு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை . இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் நேபாளம் ஆகிய தெற்காசிய நாடுகளுக்கு உச்சிமாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையை அழைக்காததன் மூலம் பைடன் இலங்கையை புறக்கணித்துள்ளாரென கடந்தவாரம் செய்திகள் வெளியாகியிருந்தன. உச்சிமாநாட்டிற்கு அழைக்கப்படாத நாடுகளில் சீனாவும் ரஷ்யாவும் உள்ளடங்குவதையும் அதேசமயம் அழைக்கப்பட்ட 110 நாடுகளில் தாய்வான் , பிலிப்பைன்ஸ், மெக்சிக்கோ ஆகியவை அடங்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் பகிரங்கப்படுத்தப்பட்ட பங்கேற்கும் நாடுகளின் பட்டியல் குறிப்பிடுகிறது.உச்சிமாநாட்டின் கருப்பொருளில் ,சர்வாதிகாரத்திற்கு எதிராக பாதுகாத்தல், ஊழலுக்கு எதிராக போராடுதல் , மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை ஊக்குவித்தல் ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளடங்குகின்றன .

இந்த காணொலி உச்சிமாநாட்டிற்கு உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்ட அரசாங்கங்கள், சிவில் சமூகம், தனியார் துறைத் தலைவர்கள் ஜனநாயகத்திற்கு புத்துயிர்ப்பளித்தல், கூட்டு நடவடிக்கைகள் மூலம் பாரிய அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கான உறுதியான நிகழ்ச்சிநிரலை முன்வைப்பார்களெனவும் அறியவருகிறது.

இதன் இரண்டாவது உச்சிமாநாடு 2022 இல் நேரில் பங்கேற்கும் மாநாடாக இருக்கும் .எதேச்சாதிகாரத்திற்கு எதிராகப் பாதுகாத்தல், ஊழலுக்கு எதிராகப் போராடுதல்,மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை ஊக்குவித்தல் போன்றவை காணொலி உச்சிமாநாட்டில் கலந்துரையாடவுள்ள முக்கியமான விடயங்கள் . இவற்றைக் கருத்தில் கொண்டால் , அமெரிக்கா ஏன் இலங்கைக்கு அழைப்பு விடுக்கவில்லையென்பதற்கான அடிப்படைக் காரணம் பூகோள நலன்சார் அரசியலேயென்பது புதியதோ அல்லது வியப்புக்குரியதோ அல்ல.

நாடுகள் பலவற்றில் ஜனநாயகமற்றதும் தேவையற்றதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் உலகம் முழுவதும் ஜனநாயகம் சீர்குலைந்து வருகிறது என்று ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனம் இன்டர்நேஷனல் (IiCH) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஜனநாயகமயமாக்கலை அனுபவிக்கும் நாடுகளை விட சீர்குலைந்துவரும் நாடுகளின் எண்ணிக்கையே அதிகமாக இருந்தது. இந்தப் போக்கு 2021 க்கு தொடரும் என்று எதிர்பார்ப்பதாக இன்டர்நேஷனல் ஐ.டி.இ.ஏ. தெரிவித்திருந்தது. 2021 ஆம் ஆண்டில், குழுவின் தற்காலிக மதிப்பீட்டின்படி, உலகில் 98 ஜனநாயக நாடுகளும் ரஷ்யா, மொராக்கோ மற்றும் துருக்கி உள்ளிட்ட 20 'கலப்பு' அரசாங்கங்களும் சீனா, சவுதி அரேபியா உட்பட 47 சர்வாதிகார ஆட்சிகளும் இருப்பதாக அந்த அமைப்பு கணக்கிடுகிறது. அத்துடன் அமெரிக்கா முதன்முறையாக பின்வாங்கும் 'ஜனநாயகம்' என வகைப்படுத்தப்பட்டிருந்தது .உலகில் , நான்கில் ஒருவருக்கு அதிகமான மக்கள் 'பின்வாங்கும்' ஜனநாயகத்தில் வாழ்கின்றனர்.

ஜனநாயகப் பின்னடைவு என்பது தாராளவாத அம்சங்கள் (சிவில் உரிமைகள், அரசாங்கத்தின் மீதான பரிசீலனைகள் ) தொடர்ந்து இழப்புகளைச் சந்திக்குமெனவும் கோவிட் -19 தொற்றுநோய் பரவல் தொடங்கியதில் இருந்து ஜனநாயக பாதிப்பை நோக்கிய போக்கு 'மிகவும் தீவிரமானதாகவும் கவலைக்குரியதாகவும்' மாறியுள்ளது என்றும் அறிக்கை கூறுகின்றது.கடந்த இரண்டு ஆண்டுகளில், வெவ்வேறு குழுக்கள் சிவில் மற்றும் அரசியல் சுதந்திரங்களை அனுபவிக்கும் பல்வேறு நிலைகள் மிகவும் வெளிப்படையாகத் தெரிந்தன.

இந்த ஏற்றத்தாழ்வுகள் நீண்ட காலமாக உள்ளபோதிலும், தொற்றுநோயின் சூழல்,அதிகளவுக்கு கவனத்தை மீண்டும் செலுத்த வைத்துள்ளது .நாடுகள் பலவற்றில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் , ஆர்வலர்கள், கல்வியாளர்கள், எதிரணியினர், விமர்சகர்களை குறிவைக்க பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் அறிக்கை கூறுகிறது. அதேவேளை பல நாடுகளில் ஜனநாயக அரசாங்கங்களை பதவி கவிழ்த்து அங்கு எதேச்சாதிகார ஆட்சிகளை நிறுவி வேறு பல எதேச்சாதிகார ஆட்சிகளுக்காக துடிப்பெடுத்தாடும் புவிசார் அரசியல் நலன்களை முன்னிலைப்படுத்தும் போட்டியான சூழலை கருத்தில் கொண்டால், ஜனநாயக மாநாட்டிற்கு அழைப்பு கிடைப்பதோ, கிடைக்காமல் புறக்கணிக்கப்படுவதோ பாரதூரமானதொன்றென கணக்கிடுவதற்கான ஒரு பிரச்சினை அல்லவென்றே தோன்றுகிறது.

# சில இரகசியங்கள் அம்பலம்!


பசில் பெர்னாண்டோ

அரசியலமைப்பு வரைவின் பிரதிகள் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுமென்ற அரசின் அறிவிப்பு நல்லது. இது பொது விவாதத்திற்கு வழிவகுக்கும் . இந்த ஆர்வமுள்ள பிராணி எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க மக்களுக்கு உரிமை உண்டு. ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவிற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பு மீண்டும் கோதாபய ராஜபக்ஷவிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட அதே அரசியலமைப்பைத் தவிர வேறொன்றும் இருக்காது.

எவ்வாறாயினும், அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறை முக்கியத்துவம் வாய்ந்தது. இது ஜனநாயகமாகவும் பொது மக்களுக்கு வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும்.மக்கள் 1978 ஆம் ஆண்டைப் போன்ற சர்வாதிகார அரசியலமைப்பை விரும்புவார்களா அல்லது அரச தலைவர் உட்பட அனைவரும் ஒரே சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நீதிமன்றங்களுக்கு சமமாகப் பதிலளிக்கக்கூடிய ஒரு முறைமையை மக்கள் விரும்புகிறார்களா?

> அரசியலமைப்பு வரைவில் என்ன முன் மொழியப்பட்டுள்ளது என்பதை அறிய பொதுமக்களுக்கு உரிமை உள்ளது. இது எதைப் பற்றியது என்பதை அறிய அவர்களுக்கு உரிமை உண்டு

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் செயல்முறையே முக்கியமான பிரச்சினை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் செயல்முறையை அந்த அரசியலமைப்பின் முதன்மை அதிகாரி எம்.வி.பைலி தனது 'இந்தியாவின் அரசியலமைப்பு' என்ற நூலில் சுருக்கமாக கூறியிருந்தார்.

அரசியலமைப்பு நிர்ணய சபை 1946 டிசம்பர் 9 ஆம் திகதி முதலாவது கூட்டத்திலிருந்து அரசியலமைப்பை பூர்த்திசெய்ய இரண்டு ஆண்டுகள், 11 மாதங்கள் மற்றும் 17 நாட்கள் ஆனது. இந்தக் கால கட்டத்தில், 11 அமர்வுகள் மற்றும் 165 நாட்களுக்கு உண்மையான வேலை இருந்தது.

அரசியலமைப்பு நகல்வரைபு 315 பிரிவுகளையும் 13 அட்டவணைகளையும் கொண்டிருந்தது. அரசியலமைப்பின் இறுதி வடிவம், முதலில் 1949 இல் நிறைவேற்றப்பட்டது. 395 சரத்துகள் மற்றும் எட்டு அட்டவணைகள் கொண்டது. அசல்மூல வரைவு கணிசமான மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதை இது காட்டுகிறது. உண்மையில், அரசியலமைப்பின் நகல் வரைபில் 7,000 திருத்தங்களுக்கான அறிவிப்புகள் இருந்தன.

இவற்றில், 2,473 திருத்தங்கள் உண்மையில் சமர்ப்பிக்கப்பட்டு , விவாதிக்கப்பட்டு அகற்றப்பட்டன. இதுவே பேரவையின் அலுவல் முறைமை எவ்வாறு இடம்பெறுகின்றதென்பதை காட்ட வேண்டும். பேரவையின் நடவடிக்கைகளைப் பார்க்கும் எவருக்கும் இது உண்மையில் ஒரு மாபெரும் ஜனநாயக நடைமுறை என்பது தெளிவாகத் தெரியும். அதிகபட்சமாக விவாதம் ஊக்குவிக்கப்பட்டது. விமர்சனங்கள் தொடர்பாக அதிகளவு சகிப்புத்தன்மை இருந்தது. மற்றும் நீண்ட விவாதங்கள் தொடர்பாக பொறுமை காட்டப்பட்டது . (இந்திய அரசியலமைப்பு, எம். வி. பைலி எழுதியது, பக்கம் 40, பத்தி 41).

சலசலப்புக்கான முயற்சியும் இல்லை, திணிப்பதற்கான முயற்சியும் இல்லை. இது இந்தியர்கள் பெருமைப்படக்கூடிய ஒரு முழுமையான ஜனநாயக நடவடிக்கையாகும்.

நடந்த ஒவ்வொரு விவாதத்தின் அனைத்துப் பிரதிகளும் நன்கு பாதுகாக்கப்பட்டு, அரசியலமைப்பை விளக்குவதில் நீதிமன்றங்களில் தொடர்ந்து குறிப்பிடப்படுகின்றன. இது சுவாரஷ்யமான கேள்விகளை எழுப்புகிறது. தற்போதைய வரைவை எழுதிய வழக்கறிஞர்களிடையே நடந்த விவாதங்களின் குறிப்புகள் எங்கே? அவர்கள் முன்வைத்த ஒவ்வொரு உட்பிரிவின் பின்னால் உள்ள காரணம் என்ன ? இந்த உட்பிரிவுகள் எதிர்கால நிகழ்வுகளில் நீடித்த மற்றும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், விவாதத்திற்கு பங்களிப்பு செலுத்த வேண்டிய அனைவருக்கும் ஒவ்வொரு உட்பிரிவின் பின்னும் உள்ள பகுத்தறிவு செயல்முறையை அறிய உரிமை உள்ளது. வரைவுக்கு முன்னதாக நடந்த இந்த விவாதங்கள் தங்களுக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கச் செய்யுமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும்.

### நகல் வரைபு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்

இந்த வரைவு ஆவணத்தைப் பார்க்கும் உரிமை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் இல்லை. அரசியலமைப்பு வரைவில் என்ன முன்மொழியப்பட்டுள்ளது என்பதை அறிய பொதுமக்களுக்கும் உரிமை உள்ளது. இது எதைப் பற்றியது என்பதை அறிய அவர்களுக்கு உரிமை உண்டு. இந்த வரைவு பாதிக்கப்பட்ட தேசத்திற்கு நற்செய்தியைக் கொண்டுவருமா? அல்லது அவர்களை இன்னும் மோசமாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதா? இந்த முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், தங்கள் விவசாயத்திற்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடிய தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியுமா என்பதைப் பார்க்க விவசாயிகளுக்கு உரிமை உள்ளது. அரசியல் சாசனம் மீன்பிடிக்கும் உரிமையைப் பாதுகாக்குமா, ஏனைய நாடுகளில் இருந்து ஊடுருவும் ஆட்களிடமிருந்து கடல் வளங்களை அரசு பாதுகாக்குமா என்பதை அறிய மீனவர்களுக்கு உரிமை உள்ளது. நியாயமற்ற மற்றும் சட்டவிரோத வர்த்தக நடைமுறைகள் தொடர அனுமதிக்கப்படுமா என்பதை அறிய வணிகர்களுக்கு உரிமை உள்ளது. ஊழலை செழிக்க அனுமதித்த தற்போதைய அரசியலமைப்பின் பலவீனங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளால் வலுவான ஊழலை ஒழிக்கும் நடவடிக்கைகளை கொண்டு வர முடியுமா என்பதை அனைவரும் பார்க்க விரும்புவார்கள். தற்போ

> சிறு பான்மையினரின் பாதுகாப்பைக் கையாள்வது தொடர்பாக நகல் வரைபானது முன்மொழியும் விதம் மிக முக்கியமானது. 1978 அரசியலமைப்பு அத்தகைய மோதல்களை மோசமாக்குவதற்கும் வன்முறையைப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் செயல்முறைகளை உருவாக்குவதற்கும் பங்களித்தது. எதிர்காலம் வித்தியாசமாக இருக்குமா?

தைய சட்டமற்ற நிலை மற்றும் சட்ட அமுலாக்கத்தின் தோல்வி ஆகியவை வலுவான அரசியலமைப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்படுமா என்பதை அனைவரும் அறிய விரும்புவார்கள். அரசியல் எதிரிகளை துன்புறுத்துவதற்கு பயன்படுத்தப்படாத சிறந்த பொலிஸ் விசாரணை முறையை உருவாக்க அரசியலமைப்பு உதவுமா மற்றும் உயிர்த்த ஞாயிறு படுகொலை போன்றகொடூரமான குற்றங்களைத் தடுக்கும் திறன் கொண்ட அனைத்து பாதுகாப்பு முகவரமைப்புகளுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்பை அரசியலமைப்பு விதிகள் கொண்டு வருமா?

யாவற்றிற்கும் மேலாக, நீதித்துறை பற்றி வரைவு என்ன சொல்கிறது என்பதை அனைவரும் அறிய விரும்புவார்கள். உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு தொடர்ந்து இருக்குமா அல்லது இந்தியாவில் வழங்கப்படுவது போல் நீதித்துறைக்கு மட்டுமே அந்த அதிகாரம் வழங்கப்படுமா? 1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் கிடைக்கப்பெற்றதும் 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புகளில் நீக்கப்பட்டதுமான சட்டத்தின் நீதித்துறை மீளாய்வு அதிகாரம் நீதித்துறைக்கு மீண்டும் வழங்கப்படுமா?

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அரசியல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு வரைவு மூலம் முன்மொழியப்பட்டுள்ள வழிகள் பற்றிய பொது நலன் சார்ந்த கேள்விகள் மேலும் உள்ளன. அதனுடன் தொடர்புடையதாக வழக்குகளைத் தாக்கல் செய்வதில் அல்லது திரும்பப் பெறுவதில் நிறைவேற்றதிகார செல்வாக்கை முடிவுக்குக் கொண்டுவருவது உள்ளது . மேலும்,பாரதூரமான குற்றங்களில் ஈடுபட்டவர்களை மன்னிக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பான விடயமும் உள்ளது .

சிறுபான்மையினரின் பாதுகாப்பைக் கையாள்வது தொடர்பாக நகல் வரைபானது முன்மொழியும் விதம் மிக முக்கியமானது. 1978 அரசியலமைப்பு அத்தகைய மோதல்களை மோசமாக்குவதற்கும் வன்முறையைப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் செயல்முறைகளை உருவாக்குவதற்கும் பங்களித்தது. எதிர்காலம் வித்தியாசமாக இருக்குமா? இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் இடையில் நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்படுமா?

சரிவடைந்த தேசத்திற்கான அரசியலமைப்பை உருவாக்குவதென்பது வரைவுக் குழுவொன்றிடம் விட்டுவிடக்கூடிய எளிதான பணி அல்ல. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரினதும் பங்களிப்பும் தேவைப்படும் கடினமான பணியாகும். தற்போது இந்த வரைவை எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவதாக அரசு அறிவித்துள்ள நிலையில், இந்த வரைவை மக்களிடம் ஏன் வழங்க முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. உதாரணமாக , இதனை அரசாங்க வலைத்தளங்களில் கிடைக்கச் செய்யலாம், இல்லையெனில் பிரசுரிக்கலாம் .

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் இந்த முக்கியமான பணியில் சகல முனையிலும் கடும் நெருக்கடியில் உள்ள நாடான இலங்கை, தவறிழைக்க முடியாது. சகல அழுத்தமான பிரச்சினைகளையும் வென்றெடுக்க வழிவகுக்கும் வகையில் அரசியலமைப்பு உருவாக்கம் பயன்படுத்தப்பட வேண்டும். இழந்த சர்வதேச மரியாதையை மீண்டும் பெறுவதற்கு இதைச் செய்வதற்கான செயல்முறை உதவ வேண்டும் என்பதையும் பார்க்க வேண்டியது அவசியம்.

இந்த செயல்முறையின் மூலம் அவசரப்படுவதை நியாயப்படுத்துவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அரசு மீண்டும் செயற்படும் அரசியலமைப்பு கட்டமைப்பை விரும்பும் அனைவரினதும் நன்மைக்கானதாக பொது மக்கள் கலந்துரையாடல்கள் அமையும்.எனவே ஒரு வெளிப்படையான செயல்முறையை கோருவது அனைவரினதும் மற்றும் தரப்பினரினதும் கடமையாகும்.

கொழும்பு டெலிகிராப்



# நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட பட்டதாரிகள் மாகாண ஆளுநரிடம் கடிதம் கையளிப்பு

இலங்கை பல்கலைக்கழகத்தில் 2019.12.31 திகதிக்குள் பட்டப் படிப்பை பூர்த்தி செய்து இதுவரை 60000 பட்டதாரிகள் நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்ட பட்டதாரிகளில் யாழ்.மாவட்ட பட்டதாரிகள் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் மகஜர் ஒன்றை நேற்று கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாங்கள் 2016 ஆம் அண்டு தொடக்கம் 2019 இற்குள் பட்டம் முடித்தும் அரசாங்கம் கோரிய அனைத்து தகுதிகள் இருந்தும் இதுவரை பட்டதாரி பயிலுனர் நியமனம் கிடைக்காமல் உள்ளதாகவும் எங்களுடன் எங்களுக்கு பின்பு பட்டம்முடித்த எங்களுடைய சமமான தகுதியை உடைய நண்பர்கள் இன்று பட்டதாரி பயிலுனர் நியமனம் பெற்று 1வருடமும் 3 மாதங்கள் நிறைவுபெற்றுவிட்டன.

ஆனால் எங்களுக்கு இதுவரை எந்த ஒரு நியாயமும் கிடைக்கப்பெறவில்லை இதுவரை பல பெயர் பட்டியல்கள் வந்தும் எங்களுடைய பெயர்கள் இடம்பெறவில்லை.

இவ்வாறு பல பட்டதாரிகள் தாங்கள் தனியார்துறைகளில் மேற்கொண்டு வந்த வேலைகளை 2020.03.10 ஆம் திகதிகளில் இருந்தே விலகி இவ் பட்டதாரி பயிலுனர் நியமனத்திற்கு விண்ணப்பித்திருந்தனர்.

எங்களால் எங்களுக்குரிய சகல தகமைகளையும் நிருபித்துக்கூட அமைச்சு எங்களைபற்றி கரிசனை எடுப்பதாக தெரியவில்லை. கடந்த 3 மாதம் மேன்முறையீடு செய்திருந்தோம் கிட்டத்தட்ட இவ்வாறான நிலையில் 465 மேற்பட்ட பட்டதாரிகள் இருக்கின்றோம் எங்களது பெயர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனை இன்னும் வெளியிடாமல் தமதப்படுத்துகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் எங்களை மிகுந்த கவலையை ஏற்படுத்தி உள்ளது.(40)

# மாவட்ட இராணுவத் தளபதிக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு

மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்குக்கு நேற்று முன்தினம் யாழில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் கொடிய வைரஸ் நோயினை உரிய காலத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து உயிர்காக்கும் பணியில் ஈடுபட்ட யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியும் - கொவிட் 19 இன் பிரதானியுமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்குக்கு ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தலைமையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ.சற்குணராஜா சிறப்புரையாற்றுவதனையும் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு மங்கல விளக்கேற்றுவதனையும் காணலாம்.(50,40)




# மழை காரணமாக 198 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியான மழைவீழ்ச்சியின் காரணமாக 198 குடும்பங்கள் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி முதல் தொடரும் அதிகரித்த மழைவீழ்ச்சியின் காரணமாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 185 குடும்பங்களை சேர்ந்த 649 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.இவர்களில் 179குடும்பங்களைச் சேர்ந்த 631 பேர் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மேலும் 392 ஏக்கர் வயல்நிலங்களும் 13ஏக்கர் தோட்டகாணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதே வேளை கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 5குடும்பங்களை சேர்ந்த 15பேர் பாதிப்பினை எதிர்கொண்டுள்ள நிலைமையில் 807 ஏக்கர் வயல்நிலங்கள் அழிவினை சந்தித்துள்ளன. இதே வேளை கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 326 ஏக்கர் வயல் நிலங்களும் 9 ஏக்கர் தோட்டக்காணிகளும் அழிவினை சந்தித்துள்ளன. மேலும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 8குடும்பங்களை சேர்ந்த 19 பேர் பாதிப்பினை எதிர்கொண்டுள்ள நிலைமையில் 1300ஏக்கர் வயல்நிலங்கள் அழிவடைந்துள்ளதோடு மின்னல் தாக்கத்தினால் இலத்திரனியல் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 198 குடும்பங்களைச் சேர்ந்த 683 பேர் அனர்த்தத்திற்குள்ளாகியுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.(55)

## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING UNIVERSITY OF JAFFNA

## BASIC SINHALA FOR SCHOOL LEAVERS LEVEL I

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates to follow the above course conducted by the Centre for Open and Distance Learning

**Programme Objectives**

- Know the Alphabets in Sinhala Language
- Practise the Pronouns in Sinhala Language
- Memorize simple basic verbs in Sinhala Language
- Practise the Greetings in Sinhala Language
- Explain Kinship terms in Tamil and Sinhala societies

**Entry Requirments**

An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream

**Course Fees**

Course fee Rs 15000.00

**Duration**

- The Duration of the Course is 60 Hours
- Classes will be conducted in weekends

**HOW TO APPLY**

Application could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffnaduring 9.00am to 2.00pm on weekdays.

**Or**

Application form could be downloaded from the website www.codl.jfn.ac.lk

Duly filled application along with the payment slip for a sum of Rs.500/= payable at the Peoples Bank AC No: 890012520002013

Application should be sent under registered cover to the following address on or before 20th December2021."Basic Sinhala for School Leavers-Level-1"should be written on the left hand corner of theenvelope.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**25.11.2021**

**Address:**
**Deputy Registrar,**
**Centre for Open and Distance Learning,**
**University of Jaffna, Thirunelvely.**

## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING UNIVERSITY OF JAFFNA

## Short Course in English Language for Officers

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from eligible candidates to follow the above course conducted by the Center for Open and Distance Learning, University of Jaffna.**

**DURATION**

- The duration of the courses is 72hrs
- Classes will be conducted in weekends

**ENTRY REQUIREMENTS**

An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream

**Course Fees**

Course Fee Rs.25000.00

**HOW TO APPLY**

Application could be obtained from the Centre for Open andDistance Learning, University of Jaffna during 9.00am to 2.00pmon weekdays.

Or

Application form could be downloaded from the website www.codl.jfn.ac.lk

Duly filled application along with the payment slip for asum of Rs.500/= payable at the Peoples Bank

**AC No:890012520002039**

Application should be sent under registered cover to thefollowing address on or before 20th December 2021.

"Short Course in English Language for Officers" should bewritten on the left hand corner of the envelope.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**25.11.2021**

**Address:**
**Deputy Registrar,**
**Centre for Open and Distance Learning,**
**University of Jaffna.**

## பருத்தித்துறை நகரசபை. வழங்குநர்களை பதிவு செய்தல் - 2022

பருத்தித்துறை நகரசபையின் 2022ம் ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்ட வழங்கு பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொகுதி A - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி B - சேவைகள் /வேலைகள்
தொகுதி C - வாகனத் திருத்தமும் சுத்திகரிப்பு சேவையும்
தொகுதி D - ஒப்பந்த வேலைகள்
தொகுதி E - உணவு வகைகள்

| தொ-குதி "A" | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A -01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் ,உபகரணங்கள், மற்றும் அதனுடைய தொடர்புடைய பொருட்கள் |
| A -02 | தளபாடமும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A -03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் போட்டோகொப்பி இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A -04 | யன்னல் திரை சீலைகள் சீருடை மற்றும் துணி வகைகள் |
| A -05 | குளியலறை பொருத்திகள், மாபிள் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A -06 | கட்டிட இரும்புப்பொருட்கள் பெயின்ற் வாணிஸ் மற்றும் ஹாட்வெயர் பொருட்கள், சீமேந்து |
| A -07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள் மின்னிணைப்புக்கான பொருட்கள், மின்மோட்டர்கள், மின்சாரபல்புகள் மின் விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள், வீதிமின் விளக்குகள் |
| A -08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனை-யவை |
| A -09 | அழுக்கு நீக்கும் பவுடர்,விம்,ஹாப்பிக் மற்றும் கிருமி நாசினிகள், கொரோணா தடுப்புப் பொருட்கள், மற்றும் ஏனையவை |
| A -10 | வாகன உதிரிப்பாகங்கள் துணைப்பொருட்கள் டயர்,ரியுப் மற்றும் ஏனையவை |
| A -11 | தோல் உற்பத்திப்பொருட்கள், சப்பாத்துக்கள் |
| A -12 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள், எஞ்சின் ஓயில் |
| A -13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A -14 | இரும்புப்பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள் |
| A -15 | கற்கள், மண் வகைகள், கூட்டெருபசளை,தார் |
| A -16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A -17 | பனைமரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள் |
| A -18 | பாதணிகள், தோல்பொருட்கள், மழைக்கவசம், கையுறை |
| A -19 | அலங்காரப்பொருட்கள் |
| A -20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | அலுமினியபிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள் |

| தொகுதி "B" | சேவைகள் /வேலைவிபரம் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழிநுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B-02 | உருக்குமரத் தளபாடங்கள் திருத்தம் |
| B-03 | மின் உபகரணங்கள் திருத்தம்,சேவிஸ் செய்தல்(காற்றுகுளிராக்கி,தொலைநகல்,நிழற்பிரதி இயந்திரம், கணனி, கைவிரல் அடையாளப்பதிவு இயந்திரம்) |
| B-04 | மின்மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீளமுறுக்குதலும் |
| B-05 | பதிப்பகவேலை- சகலவிதபடிவங்களும் புத்தகங்கட்டுதலும் |
| B-06 | கட்டிடஅமைப்பும் திருத்தவேலைகளும் |
| B-07 | உள்ளகதொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B-08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B-09 | கோலஉடைதைத்தல், கோலஉடைவழங்கல் |
| B-10 | இறப்பர் முத்திரைவகைகளைதயாரித்துவழங்கல் |
| B-11 | சுத்திகரிப்புசேவையும் பாதுகாப்புசேவையும் |
| B-12 | வளிச்சீராக்கி இயந்திரம் கொள்வனவு, திருத்தம் |
| B-13 | உலோகஒட்டுவேலைகள், அலுமினிய, சில்வர், கண்ணாடி பிற்றிங் வேலை |
| B-14 | பனர், ஸ்ரிக்கர், லமினேற்றிங், போட்டோபிறேம் தொடர்பானவேலைகள் |

| தொகுதி "C" | திருத்தமும் சுத்திகரிப்புசேவையும் |
|---|---|
| C-01 | சகலவிதமான வாகன திருத்தமும், வாகனசுத்திகரிப்பும், உராய்வு நீக்கியும், எஞ்சின் ஓயில்,சீற் குசன் வேலை |
| C-02 | வாகனங்களுக்கானரியுப் ஒட்டுதலும் உலோகவேலையும் |
| C-03 | உழவுஇயந்திரபெட்டி, உழவு இயந்திரபெட்டிதிருத்தம், ஏனைய வாகனங்களுக்கான திருத்தம் |
| C-04 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டர் திருத்தம் |
| C-05 | மோட்டர்சைக்கிள் திருத்தமும் சுத்திகரிப்பும் |

| தொகுதி "D" | ஒப்பந்தவேலைகள் |
|---|---|
| D-01 | கட்டிடநிர்மாணமும் திருத்தமும் |
| D-02 | வீதிகள் நிர்மாணமும் திருத்தமும் |
| D-03 | வர்ணம் பூசுதல் |

| தொகுதி "E" | உணவு வகைகள் |
|---|---|
| E -01 | சமைத்தஉணவு, சிற்றுண்டி வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர் போத்தல்கள் |

**நிபந்தனைகள் :**

1. வழங்கல்கள் சேவைகள் 2022 ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்.
2. ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படவேண்டும்.
3. விண்ணப்பபடிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் எமது அலுவலகத்தில் ரூபா 500.00 (VAT நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குநர்களையும் சேவைகளையும் பதிவுசெய்தல்-2022"** என குறிப்பிட்டு **தவிசாளர், பருத்தித்தறை நகரசபை, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு **31.12.2021 இற்கு** முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.
5. திருப்திகரமற்ற வழங்கல் சேவைகளை நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு தலைவருக்கே உண்டு.
6. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
7. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**யோ.இருதயராசா**
தவிசாளர், பருத்தித்துறை நகரசபை.
தவிசாளர்/செயலாளர்/கணக்காளர் **30.11.2021**

# தவறுகளை ஊடகங்கள் ஊடாக திசைதிருப்ப முயலக்கூடாது

## -ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு-



வட மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளை சிலர் ஊடகங்கள் ஊடா திசை திருப்ப முயல்வதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாக வடமாகாண ஆளுநர் தியாகராஜா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாண நிர்வாகங்களில் நிர்வாக நீதியான முறைகேடுகள் இடம்பெற்றமை தொடர்பில் எனக்கு பலரும் முறைப்பாடுகளை முன்வைக்கின்றனர்.

அவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சில அதிகாரிகள் ஊடகங்கள் ஊடாக தவறுகளை மறைப்பதற்கு திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை வழங்க முற்படுகின்றன.

மக்களின் முறைப்பாடுகள் வழங்கப்பட்ட அலுவலக நேர எட்டு மணித்தியாலத்துக்குள் கவனம் செலுத்தி மூன்று நாட்களுக்கு ஏற்படாமல் அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும்.

ஆகவே, கடந்த காலங்களில் இடம்பெற்ற நிர்வாக நீதியான தவறுகளை ஆதாரங்களை சமர்ப்பித்தால் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான முறையில் நீதி பெற்றுக் கொடுக்கப்படும் என்றனர். (75)

## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021

'இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.'



மிகைல் கோபர்ச்சேவ்
(சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)

## பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"கொரோனா எனும் கொடிய நோயுடன் நம் தேசம் போராடிக்கொண்டு இருக்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எனும் நோய்க்கான எதிர்ப்பு சக்தியையும் அதிகரிப்போம்.!"

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் தலைவருமான க.விமலநாதனின் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மண்டபத்தில் கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டு மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணி தொடர்பான விபரங்கள் பிரதேச ரீதியாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கான அனுமதி பெறல், திணைக்களங்களுக்கான காணி கையளிப்பு, தனிநபருக்கான மேட்டுநிலக் காணி மற்றும் வயல் காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும் இக் கலந்துரையாடலில் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில இளம் தொழில் முனைவோரை தெரிவு செய்வதற்கான மேற்கொள்ளப்பட்ட நேர்முக தேர்வுகளின் விபரம் காண்பிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மாகாண காணி ஆணையாளர், மாவட்ட செயலக காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் உதவிப் பணிப்பாளர், சிரேஷ்ட நில அளவை ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் பிரிவு மற்றும் காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (15)

# யாழ். வந்த மாத்தளை மாநகரசபை உறுப்பினர்கள்



மாத்தளை மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விசேட பயணமாக வருகைதந்த போது யாழ். மாநகர முதல்வர் ,உறுப்பினர்கள் மாநகர சபை அதிகரிகளை சந்தித்தனர். அத்துடன் யாழ் .நூலகம் மற்றும் யாழ்ப்பாண காலசார மத்திய நிலைய கட்டடம் என்பவற்றையும் பார்வையிட்டனர்.(75)

# அக்கராயன் குளம் வான் பாய்கிறது



கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் வான் பாயத் தொடங்கியுள்ளது.

25 அடி நீர் கொள்ளளவினைக் கொண்ட இக் குளம் நிரம்பி வான் பாய தொடங்கி உள்ளது. இக் குளம் வான் பாய்வதால் திருமுறிகண்டிக்கும் அக்கராயனுக்கும் இடையிலான போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. (27)

# மின்சாரசபையின் நடவடிக்கையால் வீதி செப்பனிடுவதில் தாமதம்

## -நகரசபை உறுப்பினர் தர்சன் சுட்டிக்காட்டு-



மின்சார சபையின் நடவடிக்கை காரணமாக சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சங்கத்தானை வட்டாரத்தில் நீண்ட காலமாக வீதி ஒன்று புனரமைக்கப்பட முடியாத நிலையில் காணப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் உபதவிசாளர் தலைமையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போது தான் இது தொடர்பாக சபையில் கருத்து வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;,

சாவகச்சேரி நகரசபையின் சபை நிதி வேலை மூலம் சங்கத்தானை வட்டாரத்தில் உள்ள வீதி ஒன்று புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்து நீண்ட காலமாகியும் மின்சாரசபையினரின் தாமதம் காரணமாக இன்றுவரை குறித்த வீதி புனரமைக்கப்படவில்லை.செப்பனிடத் தெரிவான வீதியில் உள்ள மின் கம்பங்களை அகற்றி மீள அகலிப்பு செய்து நாட்ட வேண்டிய தேவை இருந்தும் அதனை விரைவுபடுத்தி செய்யாமையே வீதி புனரமைக்கப்படாமல் இருக்க காரணம்.குறித்த வீதி புனரமைக்கவென ஒப்பந்தகாரரால் சங்கத்தானை-சப்பச்சி மாவடி வீதியில் பறிக்கப்பட்ட கற்களும் நீண்ட காலமாக தேங்கிக் காணப்படுகிறது.

இதனால் சப்பச்சி மாவடி வீதியால் வாகனங்கள் பயணக்க முடியாத நிலை காணப்படுவதாக மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (13)

# யாழ் .கோட்டை தேவாலயம் மீதான தாக்குதல் ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்டதே

## -நாவாந்துறை பங்குத்தந்தை தெரிவிப்பு-



யாழ் .கோட்டை தேவாலயம் மீதான தாக்குதல் வேண்டுமென்று செய்யப்பட்ட விடயமல்ல ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்டதே என நாவாந்துறை பங்குத்தந்தை யேசுரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் கோட்டைக்கு அருகிலுள்ள கிறிஸ்தவ தேவாலய சொரூபங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புனித அந்தோணியார் சிற்றாலயம் நேற்றிரவு மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரால் சொரூபங்கள் சேதமாக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலை செய்தவர் ஏற்கனவே எமக்கு அறிமுகமானவர். அவர் ஒரு மனநோயாளி நீண்ட காலமாக இந்த ஆலயத்திலேயே தங்கியுள்ளார் நாங்கள் நீண்ட முறை அவர்களை வெளியேற்ற பார்த்தோம்.ஆனால் அவர் போகவில்லை.இது வேண்டுமென்று செய்யப்பட்ட ஒரு விடயம் அல்ல ஒரு மனநோயாளியால் மேற்கொள்ளப்பட்ட விடயமாகும்.

அவரை பொலிசார் நேரடியாக கைது செய்துள்ளார்கள். பின்னர் எனக்கு அறிவித்திருந்தார்கள் நான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு பதிவு செய்துள்ளேன் அதனுடைய தொடர்ச்சியான நடவடிக்கையினை பொலிசார் எடுப்பார்கள்.

எனவே,இது தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடைய தேவையில்லை கிறிஸ்தவ தேவாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என யாரும் குழப்பமடைய தேவையில்லை இது ஒரு மன நோயாளியினால் மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதனையும் வேண்டுமென்று செய்யப்பட்ட விடயமல்ல என்பதையும் நான் மக்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன் என்றார். (40)

# தென்மராட்சியில் கொங்கிறீட் வீதித் திட்டத்தில் தெரிவான மூன்று கிராமிய வீதிகளுக்கு அடிக்கல்

கிராமிய வீதிகளை கொங்கிறீட் வீதியாக புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று கிராமிய வீதிகளுக்கு கடந்த 26ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது.

கிராமிய வீதிகள் , ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சினால் முன்னெடுக்கப்படும் குறித்த வேலைத்திட்டம் யாழ் .மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் முன்மொழிவு மற்றும் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படுகிறது.

அந்தவகையில் தென்மராட்சி பிரதேசத்தில் முதற்கட்டமாக கைதடி மத்தி,கைதடி மேற்கு மற்றும் கைதடி தென் கிழக்கு கிராமங்களில் கொங்கிறீட் வீதிகளுக்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டுள்ளது.தலா 2மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ள குறித்த வீதிகளுக்கான அடிக்கல்லை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் செயலாளரும்,கரவெட்டி பிரதேசசபை உறுப்பினருமான ச.இராமநாதன் நாட்டிவைத்திருந்தார். (13)

# கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடி



முல்லைத்தீவு -கரைதுறைபற்று ,குமுழமுனை பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

5,000 இற்கு மேற்பட்ட கால்நடைகள் இப்பிரதேசத்தில் காணப்படுவதாகவும் மேய்ச்சல் தரவை நிலங்கள் இல்லை எனவும் அனைத்து நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் கடந்த காலங்களில் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மேய்ச்சல் தரவைக்கான நிலங்களை இனங்காட்டுமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

கால்நடை வளர்ப்பிற்கான மேய்ச்சல் தரவை நிலங்கள் எதிர்காலத்தில் குமுழமுனை பிரதேசத்தில் அமைய வேண்டும் எனவும் குமுழமுனை கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். குமுழமுனை பிரதேசத்தில் பெருமளவு நிலப் பரப்பு வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளது. இந்நிலங்கள் விடுவிக்கப்படும் போது மேய்ச்சல் தரவை அமைவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

நித்தகை குளம் அபிவிருத்தி செய்யப்பட்டு விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதும் கால்நடைக்கான மேய்ச்சல் இடங்கள் உருவாகும் எனவும் குமுழமுனை விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (27)

# பக்க பாதைகளை அகற்றக் கோரிக்கை



கிளிநொச்சி -பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான வீதிகளில் காணப்படுகின்ற பக்க பாதைகளினால் பல்லவராயன்கட்டு பாலாவி வீதியில் வெள்ள அபாயம் உருவாகி வருவதாக பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான 17 கிலோமீற்றர் வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் புனரமைக்கப்பட்டு வந்தது. இவ்வேலைகள் இரு மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் வீதிப் புனரமைப்புகளுக்காக அமைக்கப்பட்ட பக்க பாதைகள் அகற்றப்படாததன் காரணமாக மதகுகள், பாலங்கள் வழியாக வெள்ள நீர் வடிந்தோட முடியாத நிலைமை உள்ளது. குறிப்பாக கரியாலைநாகபடுவான் குளத்தின் வான் வெள்ளம் ஓரிரு நாட்களில் பாய உள்ளது. இக்குளத்தின் நீர் பல்லவராயன்கட்டு பாலாவி வீதியில் குறிப்பாக சம்புவெளிப் பகுதியில் வீதியினை மூடக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

இதன் காரணமாக வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பாலாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொள்வார்கள். இவ் அனர்த்தத்தினை தடுப்பதற்கு பக்க பாதைகளை உடனடியாக அகற்றுவதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (27)

# உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த 27,28 ஆம் திகதிகளில் கலாநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரோன் ராகவனின் அலுவலகத்தினால் 75 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட மூங்கிலாறு கிராமத்தில் 25 குடும்பங்களுக்கும் தேவிபுரம் கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

உலர் உணவு பொதிகளை நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் கதிர்வேல் செவ்வேள் நேரடியாக சென்று பார்வையிட்டு வழங்கி வைத்துள்ளார். (15)

# புகையிலை, போதைப்பொருள் கம்பனிகளின் பிரதானமான இலக்கு சிறுவர் குழுக்களே

### -சிறுவர்களை பாதுகாப்பது சமூக கடமை- வைத்தியர் ரமேஸ்குமார்-



போதைப் பொருள் மற்றும் புகையிலைக் கம்பனிகளின் தங்களின் வருமானத்தையும் இலாபகரமான பெறுபேற்றை அதிகரிக்க பிரதான இலக்காக சிறுவர் குழுக்களை இலக்கு வைத்துச் செயற்படுகின்றனர்.

இவற்றை உணர்ந்து பெற்றோர் தங்களது பிள்ளைகள் மீது அக்கறையோடு செயற்படுவதுடன் சமூக அமைப்புக்களும் இவற்றிலிருந்து தங்களது சமூகம் சார்ந்த சிறுவர்களை பாதுகாப்பதற்கு பொறுப்புடனும் விழிப்புடனும் செயற்படவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை டில்கோ ஹோட்டலில் நடந்த போதைப் பொருள் தடுப்பு தொடர்பான மாநாட்டில் விருந்தினராக கலந்து கொண்ட வைத்தியர் எஸ்.ரமேஸ்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் மற்றும் புகையிலை கம்பனிகள் சிறுவர்களை கவரும் வியாபார உக்தியாக சினிமாக்களை பயன்படுத்துகின்றனர்.

சினிமாக்களின் வரும் சிறுவர்களின் மனம் கவரும் ஹீரோக்கள் புகைத்தல் காட்சிகளில் ஈடுபடுவது போதைப் பொருளை பாவிப்பது போன்ற காட்சிகள் சிறுவர்கள் மனதில் ஆழமாக பதிந்து தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இவற்றால் சிறுவர்கள் வழிதவறிச் சென்று போதைப் பழக்கம், புகைப்பழக்கத்துக்கு ஆளாகின்றனர். இவற்றை நாம் சமூகப் பொறுப்புடன் இனம்காண்பதன் மூலம் இவ்வாறானவர்களின் பிடியிலிருந்து எமது எதிர்கால சந்ததியை மீட்க முடியும்.

அதற்கும் அப்பால் இவர்களை பாதுகாப்பதற்கான பாரிய பொறுப்பு ஊடகங்களைச் சாரும். ஊடகங்களே இவர்களுக்காக கருத்துக்களை இலகுவாக கொண்டு செல்லமுடியும்.

மேலும் அத்தனை துறைசார்ந்தவர்களும் போதைப்பொருள், புகைப் பொருட்களுக்கு எதிராக அர்ப்பணிப்போடு செயற்பட்டால் எமது சமூகத்தை பாதுகாக்க முடியும் என்றார்.(30)

# அருட்தந்தையர்கள் அரசியல் கைப்பாவைகளாக மாறக்கூடாது

### -அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ-

அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்த கூற்று தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் தேட முற்படுகின்றன. அரசியல் கைப்பாவையாக மாற வேண்டாம் என்று அருட்தந்தைகளை கேட்டுக் கொள்வதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கட்டுகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

பொதுமக்கள் அல்லது மதகுருமார்கள் கூறும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பது சி.ஐ.டி.யின் பணியும் கடமையும் ஆகும். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ளாதிருந்தால் இந்த அறிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியிருக்கும். அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிராக சட்டம் பயன்படுத்தப்படவில்லை. அரசியல் கைப்பாவையாக மாற வேண்டாம் என்று அருட் தந்தைகளை கேட்டுக் கொள்கிறேன்.

1971 இல் ஜே.ஆர்.ஜயவர்தன எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கு உதவுவதாகக் கூறினார்.

ஆனால் இன்றுள்ள எதிர்க்கட்சி அவ்வாறு இல்லை. நாடு முன்னேற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கொவிட் காலத்தில் தடுப்பூசியைப் பெறுவதற்காக வருகை தந்தவர்களே தற்போது அந்தந்த நாடுகளுக்கு திரும்புகின்றனர்.

இதனை நாட்டு மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாக எதிர்க்கட்சி திரிபுபடுத்துகிறது. தற்போது வெளிநாடு செல்லும் மக்களை நாம் வணங்க வேண்டும். அவர்களிடமிருந்து வரும் டொலர்களால்தான் நாட்டிற்கு எண்ணெய் கூட இறக்குமதி செய்யப்படுகிறது. அந்த மக்களைத் தான் நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் என்று அவமானப்படுத்தியுள்ளனர் என்றார்.

## கட்டானவில் சந்தேகத்திற்கிடமான பொருட்களுடன் ஒருவர் கைது

கட்டான - களுவாரிப்புவ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் அனுமதியின்றி மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 23 கிலோ கிராம் பொட்டாசியம் நைட்ரேட் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 54 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். மேலும் குறித்த வீட்டில் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, வாள் மற்றும் இரண்டு கூரிய கத்திகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பெயர்மாற்ற அறிவித்தல்

நெடுவரம்பு, ஆண்டான்குளம் கிட்ணசாமி கணேசம்மா பி.ப.இல-2353 ஆகிய எனது பெயரை கிட்ணசாமி கணேஸ்வரி எனப் பெயர்மாற்றம் செய்யவுள்ளதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருவதுடன் இன்றிலிருந்து அனைத்து ஆவணங்களிலும் கிட்ணசாமி கணேஸ்வரி என்றே கையொப்பம் இடுவேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

**கிட்ணசாமிகணேஸ்வரி**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக்கடைகள்
### குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2022

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2022 ஆம் ஆண்டிற்கு (01.01.2022 - 31.12.2022) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 01.12.2021 - 10.12.2021 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 10.12.2021 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 10.12.2021 வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகை - 2022" என எழுதி மூலப்பிரதியை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கும் எதிர்வரும் **10.12.2021** ஆம் திகதி **பி.ப 02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவ கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 500.00 | 25,000.00 | 9,904,950.00 | |
| 02 | அக்கரை கடற்கரை - வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடல் | 500.00 | 2000.00 | 61,380.00 | 500.00 |
| 03 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 10,000.00 | 1,485,049.50 | 1200.00 |
| 04 | அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 1,054,894.50 | 1200.00 |
| 05 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 282,150.00 | |
| 06 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 259,371.09 | 250.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 346,500.00 | |
| 02 | நிலாவரை திறந்த வெளிச்சந்தையும், வாகன தரிப்பிடமும் (நிலாவரை பொதுக்கிணறு சுற்றுலாமையம் தவிர்த்து) | 500.00 | 2000.00 | 641,300.00 | |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 561,330.00 | 2250.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 614,889.00 | 2250.00 |
| 02 | உரும்பிராய் கோழியிறைச்சிகடை | 500.00 | 3000.00 | 437,580.00 | 2250.00 |

1. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
2. மீள்கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு பிரதி (மின்சார கட்டணப் பட்டியல்/ வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்
8. சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தாருக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
9. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
10. சபையின் அச்சுவேலி கொல்களத்தினை ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

**2021.11.30**

## 2022ஆம் ஆண்டு தை 01ஆம் திகதி தொடக்கம் 2022 மார்கழி 31ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப்பாதுகாப்பு நிலையத்தினை குத்தகை வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினால் கேள்வி பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி பத்திரங்களை 13.12.2021 திங்கட்கிழமை தொடக்கம் 28.12.2021 செவ்வாய்க்கிழமை வரை வைத்தியசாலையில் உள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 09.00மணி தொடக்கம் பிற்பகல் 4.30 வரை பின்வரும் கொடுப்பனவுகளைச் செலுத்தி கேள்வி பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 10,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 28.12.2021ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு முன் நேரடியாக மீளளிப்பு தொகையினை செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதி, நேரத்தின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு.கந்தசாமி முருகவேல், தலைவர், நோயாளர் நலன்புரி சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் **2022ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வாகனப்பாதுகாப்பு நிலையத்தினை குத்தகை வழங்குவதற்கான கேள்வி கோரல்** என குறிப்பிடப்படிருத்தல் வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 28.12.2021 (செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு கேள்வி சபை முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமூகமளித்தல் வேண்டும். தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**நோயாளர் நலன்புரி சங்கம்**
**மாவட்ட பொது வைத்தியசாலை. கிளிநொச்சி.**

## 2022ஆம் ஆண்டு தை 01ஆம் திகதி தொடக்கம் 2022 மார்கழி 31ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையினை குத்தகை வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை 01.01.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

13.12.2021ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 28.12.2021ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பி.ப 4.30 மணி வரை பின்வரும் கொடுப்பனவைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு வழங்கப்படாத தொகை | மீளளிப்பு வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை | 1500.00 | 20,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 28.12.2021ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00மணிக்கு முன் நேரடியாக மீளளிப்பு தொகையினை செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதி, நேரத்தின் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு.கந்தசாமி முருகவேல், தலைவர், நோயாளர் நலன்புரி சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் **2022ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையினை குத்தகை வழங்குவதற்கான கேள்வி கோரல்** என குறிப்பிடப்படிருத்தல் வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 28.12.2021(செவ்வாய்க்கிழமை) காலை 10.30மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமூகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி இல்லாத சந்தர்ப்பத்தில் தங்கள் பிரதிநிதியை பங்குகொள்ளக் கூடியவரை கடிதம் வழங்கி அனுப்ப முடியும். தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**நோயாளர் நலன்புரி சங்கம்**
**மாவட்ட பொது வைத்தியசாலை. கிளிநொச்சி.**

# இந்தியா - நியூசிலாந்து முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது






நியூசிலாந்து அணியின் கடைசி விக்கெட் ஜோடியான அஜாஸ் பட்டேல், ரச்சின் ரவீந்திரா இருவரும் நங்கூரம் போல் நிலைத்து நின்று ஆடி இந்திய அணியின் வெற்றிக் கனவை கலைத்ததால்இந்தியா - நியூசிலாந்து முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கான்பூரில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா 345 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 296 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 49 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்சை ஆடிய இந்தியா, 7 விக்கெட் இழப்பிற்கு 234 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டிக்ளேர் செய்தது. இதனால் மொத்தம் 283 ஓட்டங்கள் இந்தியா முன்னிலைப் பெற்றது.

இதையடுத்து 284 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 4 ஆம் நாள் ஆட்டநேர முடிவில், ஒரு விக்கெட் இழப்பிற்கு 4 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டாம் லாதம் 2 ஓட்டங்களுடனும், வில்லியம் சோமர்வில் ஓட்டம் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்று கடைசி நாள் ஆட்டத்தின்போது, 279 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இருவரும் களம் இறங்கினர். இந்திய ஆடுகளத்தில் கடைசி நாள் ஆட்டத்தில் 279 ஓட்டங்கள் எடுப்பது மிகவும் கடினம். இதனால் இந்தியா எளிதில் வெற்றி பெறும் என கருதப்பட்டது.

ஆனால், மதிய உணவு இடைவேளை வரை முதல் செசனில் டாம் லாதம், வில்லியம் சோமர்வில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டனர். அஸ்வின், அக்சார் பட்டேல், உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா, ஜடேஜா ஆகியோர் மாறிமாறி ஓவர்கள் வீசியும் பலன் அளிக்கவில்லை.

நியூசிலாந்து அணி மதிய உணவு இடைவேளை 35 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 79 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. அதன்பின்னர் ஆட்டம் இந்தியா பக்கம் திரும்பத் தொடங்கியது. சோமர்வில் 36 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அரை சதம் கடந்த டாம் லாதம் 52 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

தேநீர் இடைவேளைக்கு பிறகு அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிந்தன.

கப்டன் வில்லியம்சன் 24 சேர்த்து ஆட்டமிழக்க பின்வரிசை வீரர்களும் விரைவில் ஆட்டமிழந்தனர். 155 ஓட்டங்களில் 9 விக்கெட்டுகளை இழந்தது. இதனால் இந்தியா வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருந்தது.

ஆனால், கடைசி விக்கெட் ஜோடியான அஜாஸ் பட்டேல், ரச்சின் ரவீந்திரா இருவரும் நங்கூரம் போல் நிலைத்து நின்றனர். அவர்களின் விக்கெட்டை வீழ்த்த இந்திய சுழற்பந்துவீச்சாளர்கள் தொடர்ந்து முயற்சி செய்தும் பலனில்லை. இதனால் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 9 விக்கெட் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் எடுத்தது. எனவே, போட்டி டிராவில் முடிந்தது.

இப்போட்டியில் நியூசிலாந்து அணியை தோல்வியில் இருந்து காப்பாற்றியிருக்கிறார் ரச்சின் ரவீந்திரா. நீண்ட நேரம் களத்தில் நின்ற இவர் 91 பந்துகள் தாக்குப்பிடித்து ஆடினார்.

பந்துவீச்சில் ஜடேஜா - 4 அஸ்வின்3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

# டேவிஸ் கிண்ண டென்னிஸிலிருந்து வெளியேறியது நடப்புச் சம்பியன்



சர்வதேச டென்னிஸ் அரங்கில் ஆடவருக்கான உலகக் கிண்ணப் போட்டியாக அமையும் டேவிஸ் கிண்ண டென்னிஸ் ஏ குழு போட்டியில் ரஷ்யாவிடம் தோல்வி அடைந்த நடப்பு உலக சம்பியன் ஸ்பெய்ன், போட்டியிலிருந்து நொக் அவுட் செய்யப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற குழுநிலை போட்டியில் ஸ்பெய்னை 2 - 1 என்ற ஆட்டக் கணக்கில் வெற்றிகொண்ட ரஷ்யா கால் இறுதியில் விளையாட தகுதிபெற்றுள்ளது.

ஆடவருக்கான முதலாவது ஒற்றையர் போட்டியில் ரஷ்யாவின் அண்ட்ரே ரூப்லெவ்வை 2 - 1 என்ற செட்கள் அடிப்படையில் வெற்றிகொண்ட பெலிசியானோ லோப்பெஸ், ஸ்பெய்னை 1 - 0 என்ற ஆட்டக் கணக்கில் முன்னிலையில் இட்டார்.

ஆனால், இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீரர் பெப்லோ கெரினோ பஸ்டாவை 2 நேர் செட்களில் வெற்றிகொண்ட ரஷ்யாவின் டெனில் மெட்வடேவ் ஆட்ட நிலையை 1 - 1 என சமப்படுத்தினார்.

தீர்மானமிக்க இரட்டையர் போட்டியில் ஸ்பெய்ன் ஜோடியான மார்செல் க்ரநோலர்ஸ், பெலிசியானோ லோப்பெஸ் ஆகியோரை அஸ்லான் கரட்சேவ், அண்ட்ரே ரூப்லெவ் ஜோடியினர் 2 - 1 என்ற செட்கள் அடிப்படையில் வெற்றி கொண்டு ரஷ்யாவை கால் இறுதிக்கு முன்னேறச் செய்தனர்.

சி குழுவில் செக் குடியரசுக்கு எதிரான போட்டியில் 0 - 1 என்ற ஆட்டக் கணக்கில் பின்னிலையில் இருந்த பிரித்தானியா அடுத்த 2 ஆட்டங்களிலும் வெற்றிபெற்று தோல்வி அடையாத அணியாக கால் இறுதிக்கு முன்னேறியது.

கஸக்ஸ்தான் (குழு பி), குரோஏஷியா (குழு டி), இத்தாலி (குழு ஈ), ஜேர்மனி (குழு எவ்) ஆகிய அணிகளும் தோல்வி அடையாமல் கால் இறுதிச் சுற்றுக்கு முன்னேறின.

ஆறு குழுக்களிலிருந்து அதிசிறந்த இரண்டாம் இடங்களைப் பெற்ற 2 அணிகளான சுவீடன் (குழு பி), சேர்பியா (குழு எவ்) ஆகியனவும் கால் இறுதிகளில் விளையாட தகுதி பெற்றன.

இப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் டிசம்பர் 3 ஆம், 4 ஆம் திகதிகளிலும் இறுதிப் போட்டி டிசம்பர் 5 ஆம் திகதியும் மெட்ரிட் டென்னிஸ் அரங்கில் நடைபெறும்.

# அஸ்வின் புதிய மைல்கல் ஹர்பஜன் சாதனை முறியடிப்பு



இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் டெஸ்ட் கிரிக்கெட்டில் முக்கிய மைல்கல்லை எட்டி, ஹர்பஜன் சிங் சாதனையை முறியடித்துள்ளார்.

கான்பூரில் நடந்த நியூஸிலாந்து - இந்திய அணிக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வெளிச்சக் குறைவு காரணமாக முன்கூட்டியே நிறுத்தப்பட்டதால், டிராவில் முடிந்தது.

இந்திய அணி கடந்த 1988 முதல் 1994 ஆம் ஆண்டு வரை உள்நாட்டில் நடந்த 13 டெஸ்ட் போட்டிகளிலும் தொடர்ந்து முடிவு கிடைத்தவாறு இருந்தது.

அதற்கு அடுத்தாற்போல், 2018 ஆம் ஆண்டு முதல் 2021, மார்ச் 4 ஆம் திகதி இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டி வரை 12 போட்டிகளிலும் முடிவு கிடைத்தது. 13 ஆவது டெஸ்ட் போட்டியிலும் முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோது, இந்த ஆட்டம் டிராவில் முடிந்தது.

இந்தப் போட்டியில் ரவிச்சந்திரன் அஸ்வின் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியபோது, டெஸ்ட் கிரிக்கெட்டில் முக்கிய மைல்கல்லை எட்டினார்.

அதாவது அஸ்வின் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியபோது, டெஸ்ட் கிரிக்கெட்டில் 418 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வகையில் ஹர்பஜன் சிங்கின் சாதனையை முறியடித்தார். ஹர்பஜன் சிங் டெஸ்ட் போட்டிகளில் 417 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். அவரின் சாதனையை அஸ்வின் முறியடித்து தற்போது 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஹர்பஜன் சிங் 103 போட்டிகளில் 417 விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில், அஸ்வின் 80 டெஸ்ட் போட்டிகளில் 418 விக்கெட்டுகளை வீழ்த்தி புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

ஜாம்பவான் அனில் கும்ப்ளே டெஸ்ட் கிரிக்கெட்டில் 619 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்திலும், முன்னாள் கப்டன் கபில் தேவ் 434 விக்கெட்டுகளை வீழ்த்தி 2 ஆவது இடத்திலும் உள்ளனர்.

-ரி-10 கிரிக்கெட் போட்டி-

# ஹசரங்க மாயாஜல சுழல் சென்னை பிரேவ்ஸ் தோல்வி



ரி-10 தொடரின் 18ஆவது லீக் போட்டியில், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

அபுதாபியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை பிரேவ்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 57 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பானுக ராஜபக்ஷ 18 ஓட்டங்களையும் தசுன் சனக 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளையும் ராயீஸ் மற்றும் ரஸ்ஸல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சுல்தான் அஹமட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 58 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி, ஆறு ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டேவிட் வெய்ஸ் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் டொம் பென்டோன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்னை பிரேவ்ஸ் அணியின் பந்துவீச்சில், அஞ்சலோ பெரேரா மற்றும் மார்க் டியால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் நுவான் பிரதீப் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 3 விக்கெட்டுகளை வீழ்த்திய வனிந்து ஹசரங்க தெரிவுசெய்யப்பட்டார்.

# டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் 19 ஓட்டங்களால் வெற்றி

ரி-10 தொடரின் 23 ஆவது லீக் போட்டியில், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

அபுதாபி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியும் நோதர்ன் வோரியஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நோதர்ன் வோரியஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டொம் மோறிஸ் 39 ஓட்டங்களையும் ஆந்ரே ரஸ்ஸல் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். நோதர்ன் வோரியஸ் அணியின் பந்துவீச்சில், ஒஷேன் தோமஸ் 3 விக்கெட்டுகளையும் தாஹிர் மற்றும் ஜோசுவா லிட்டில் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 135 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நோதர்ன் வோரியஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 110 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரோஸ் வைட்லீ 26 ஓட்டங்களையும் ரொவ்மன் பவல் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியின் பந்துவீச்சில், வஹாப் ரியாஸ், ஓடியன் ஸ்மித் மற்றும் ஆந்ரே ரஸ்ஸல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக, டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியின் தலைவர் வஹாப் ரியாஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

# வாழ்நாள் முழுவதும் நிறத்தால் கிண்டலுக்கு இலக்காகினேன்

## மனம் திறக்கும் தமிழக வீரர் சிவராமகிருஷ்ணன்-



வாழ்நாள் முழுவதும் என்னுடைய நிறத்தால் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாகி வேறுபாடுகாட்டப்பட்டேன் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தமிழகத்தைச் சேர்ந்தவரான சிவராமகிருஷ்ணன் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் அபினவ் முகுந்த் ட்விட்டரில் கருத்தைப் பதிவிட்டிருந்தார். அதில் இந்தியாவுக்கு வெளியேயும், உள்ளேயும் என்னுடைய 15 வயதிலிருந்து அதிகமாகப் பயணித்திருக்கிறேன். நான் சிறுவயதிலிருந்து என் நிறத்தின் மீது மக்கள் வைத்திருக்கும் ஒருவிதமான எண்ணம் எனக்கு புதிராகவே இருந்தது.

கிரிக்கெட்டை நன்றாக அறிந்தவர்கள், புரிந்தவர்ளுக்கு இது நிச்சயம் புரியும். வெயில்காலத்திலும் வெயில் இல்லாத நேரத்திலும் நான் பயிற்சியில் இருந்திருக்கிறேன், விளையாடியிருக்கிறேன், நான் ஒருமுறைகூட வெயிலில் விளையாடியதற்காக நான் தோல் நிறம் குறைந்துவிட்டதாக வருத்தப்பட்டதில்லை.

நான் செய்வதை விரும்புகிறேன், சில விஷயங்களை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் வெளியே செலவிட்டிருக்கிறேன். நாட்டிலேயே அதிகமான வெப்பமான பகுதியான சென்னையிலிருந்து வந்தேன், என்னுடைய இளமைக்கால வாழ்க்கை பெரும்பகுதி கிரிக்கெட் மைதானத்திலேயே செலவிட்டேன் எனத் தெரிவித்திருந்தார்

இதற்கு பதில் அளித்து தமிழக கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சிவராமகிருஷ்ணன் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார் அதில் என் நிறத்தால் நான் விமர்சிக்கப்பட்டிருக்கிறேன் என் வாழ்க்கை முழுவதும் என் நிறத்தால் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக்கப்பட்டு வேறுபாடு காட்டப்பட்டேன். இதைப் பற்றி ஒருபோதும் நான் கவலைப்பட்டதில்லை. ஆனால் துரதிர்ஷ்டமாக இதுபோன்ற நிகழ்வுகள் நம்முடைய சொந்த தேசத்திலேயே எனக்கு நடந்தது எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் கடந்த சில மாதங்களாக நிற வெறி என்பது, மிகப்பெரிய பேசுபொருளாக மாறிவருகிறது. இங்கிலாந்தில் யார்க்ஸையர் கிரிக்கெட் கிளப்பில் தான் நிறைவெறியோடு பாகுபாடு காட்டப்பட்டேன் என ஆசிம் ரபிக் எழுப்பிய விவகாரம் பெரும் சர்ச்சையானது குறிப்பிடத்தக்கது. இந்த விவகாரத்தில் யார்க்ஸையர் கிளப் எந்த விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# எமது வெற்றிக்குப் பின்னால் உள்ள புத்துணர்வான மனிதர்களை கொண்டாடுகிறோம்!

ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில் 2019/20 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் ‘ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளர்’ என ஏழாவது தடவையாகவும் அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

கடந்த பல வருடங்களாக, ஆயிரக்கணக்கான வாழ்வாதாரங்களை நிலைநிறுத்தியதற்கும், ஏற்றுமதி விநியோகச் சங்கிலியில் நாம் ஆற்றிய பங்களிப்பிற்காகவும், நிலைத்தன்மையில் முன்னணியில் இருந்ததற்காகவும், இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டியதற்காகவும் நாங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.

**பிரண்டிக்ஸ் விழுமியங்களின் உண்மையான தூதர்களான நமது மக்களின் சிறப்பையும் அர்ப்பணிப்பையும் கொண்டாட இத்தருணத்தை எடுத்துக்கொள்கிறோம்.**

www.brandix.com

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்கான அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்கான வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

# வட மாகாணம் - டிசம்பர் 2021

## யாழ்ப்பாணம்

### சாவகச்சேரி

2021-12-05 09:00-17:00
கைதடிமாகாணசபை, நாவற்குழி சங்கன் கட்டுமானம் , சித்தமருத்துவம் கைதடி, யுனைற்றட் மோட்டார்ஸ் நுணாவில், கைதடி நாராயணா வன்பொருள், அறுகுவெளி, நாவற்குழி அரசு உணவு களஞ்சியம், நாவற்குழி, கைதடி, கைதடிஎ மானிப்பாய் வீதி (கலைவாணி), நவபுரம், , கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம், கைதடி மானிப்பாய் வீதி கோப்பாய் வரை, கள்ளிநகர், கல்வயல் மானாவளை, சந்திரபுரம், கெருடாவில், கோகிலாகண்டி மாங்களாபட்டறை, நாவற்குழி லிங்க்ஷ் ரெடிமிக்ஸ், நுணாவில் பருத்தித்துறை வீதி, மட்டுவில் வாகையடி, மறவன்புலவு, கேரைதீவுவீதி , நாவற்குழிசந்தி, நுணாவில்சந்தி, புத்தூர்வீதி - மட்டுவில் இராணுவமுகாம், முதியோர் இல்லத்தடி கைதடி - A 9 வீதி, தச்சந்தோப்பு, தனங்கிளப்பு

2021-12-12 09:00-17:00
சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றவளாகம், அரசடி , சாவகச்சேரி, அரசடி மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, சாவகச்சேரி பிரதேச செயலகம், டச்சுவீதி, கண்டுவில், கச்சாய்வீதி, , கல்வயல், சங்கத்தானை, நுணாவில்

### சுன்னாகம்

2021-12-05 09:00-17:00
சுன்னாகம்கார்கில்ஸ், சுன்னாகம்மக்கள்வங்கி, சுன்னாகம்இலங்கைவங்கி, சுன்னாகம்சந்தை, சுன்னாகம்கொமர்ஷல்வங்கி, ஜெட்மோட்டார்சுன்னாகம், கல்லாரை, கந்தையாஉபாத்தியார்சந்தி, கொத்தியாவத்தை

2021-12-11 08:30-17:00
மல்லாகம்நீதிமன்றம், அளவெட்டி, ஆர்க்லேன் -உடுவில், டச்சுவீதி- சங்குவேலி, ஏழாலை, கணேஸ்வரம் - தெல்லிப்பளை, அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுசபை, மாதனை, மல்லாகம்சந்தி, மாவிட்டபுரம் கந்தசாமிகோவில், மல்லாகம் நீதிமன்றம் பிரதேசம், பன்னாலை, , சங்குவேலி , தெல்லிப்பளை, துர்க்காபுரம், உடுவில்மகளிர்கல்லூரி

2021-12-12 09:00-17:00
அச்சுவேலி நகரம், டச்சுவீதி, அச்சுவேலி, இடைக்காடு, கதிரிப்பாய், மருதடிசந்தி, செல்வநாயகபுரம் வசாவிளான், பலாலிதெற்கு, தம்பாலை, தோப்பு, வளாய் விமான நிலையசந்தி, விஜிதாமில்

2021-12-18 09:00-17:00
கந்தையாஉபாத்தியார்சந்தி, கொத்தியாவத்தை

2021-12-19 08:30-17:00
நீர்வேலிகூட்டுறவுஆலை, நீர்வேலி, சிறுப்பிட்டி

2021-12-26 08:30-17:00
மானிப்பாய்கார்கில்ஸ், மானிப்பாய் கொமர்ஷல் வங்கி, ஈஞ்சடி வைரவர் கோவிலடி மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை, மானிப்பாய்சந்தை, மேதர்.மானிப்பாய்

### யாழ்நகர்

2021-12-05 08:30-17:00
செல்வமஹால் திருமண மண்டபம், கொக்குவில்சந்தி, பூநாறிசந்தி, சிவப்பிரகாசம் வீதி, சுகாதாரதிணைக்களம், புதியமூன்றுமாடிக்கட்டிடம் (போதனா மருத்துவமனை), யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனை, யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, மருத்துவமனை வீதி

2021-12-12 08:30-17:00
அவுனோர் (பிவிரி) லிமிடெட், தம்றோ, ஐபிசிதமிழ், நொதேர்ன்மருத்துவமனை, சூரியஉதயம் (வீனஸ்வைத்தியசாலை), பி.சி.சி.ஏ.எஸ் கல்லூரி,அம்மன்வீதி கந்தர்மடம், ஆரியகுளம்- பருத்தித்துறைவீதி, இல்லுப்பையடி சந்தி, பலாலிவீதி , பிஸாஹட் மற்றும் ஐபிசி தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவென்யூ பலாலி வீதி, ஸ்ரான்லிவீதி, ஆரியகுளம்சந்தி, யாழ்மருத்துவமனை -பலாலிவீதி

2021-12-16 08:30-17:00
மணியந்தோட்டம்ஐஸ்தொழிற்சாலை, கொழும்புத்துறை, மணியந்தோட்டம், பழையபூங்காவீதி, பாஷையூர், பெரியகோவில், பூங்காங்குளம், உதயபுரம்

2021-12-19 08:30-17:00
செல்வ மஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறி சந்தி, சிவப்பிரகாசம் வீதி

2021-12-26 08:30-17:00
அவுனோர் (பிவிரி) லிமிடெட், தம்றோ, ஐபிசிதமிழ், நொதேர்ன் மருத்துவமனை, சூரிய உதயம் (வீனஸ் வைத்தியசாலை), பி.சி.சி.ஏ.எஸ்கல்லூரி, அம்மன் வீதி கந்தர்மடம், ஆரியகுளம்- பருத்தித்துறைவீதி, இல்லுப்பையடிசந்தி, பலாலிவீதி , பிஸாஹட் மற்றும் ஐபிசிதமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவென்யூ பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ் மருத்துவ மனை -பலாலிவீதி

### யாழ்புறநகர்

2021-12-04 08:30-17:00
கலைவாணி வீதி பந்திங்சென்டர், கோப்பாய் கல்வியியல் கல்லூரி, கோண்டாவில் நீர்வழங்கல் சபை , கோப்பாய் இராணுவமுகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, கலை வாணி -திருநெல்வேலி, கோண்டாவில் கிழக்கு, கிருஷ்ணன் கோவிலடி, பொற்பதி, புகையிரத நிலைய வீதி சந்தி, இராஜ வீதி சந்தி, இராஜவீதி கோப்பாய், திருநெல்வேலி, வாமாஸ் வீதி

2021-12-05 08:30-17:00
மருத்துவபீடஅரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், மருத்துவபீடம், அச்சுகூடம்கே.கே.எஸ்வீதி, கொக்குவில், மாவடி -திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படிகொக்குவில், சைலோ -கோயில்வீதி

2021-12-12 08:30-17:00
வெளிவாரிபட்டப்படிப்புகள் நிலையம், திண்ணை விடுதி, கொமர்ஷல் வங்கி - பலாலி வீதி, பனிக்கர்லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையர் கோவிலடி, திருநெல்வேலி- சந்தை

2021-12-18 08:30-17:00
அட்டகிரி, ஆனைக்கோட்டைவி.சி. , சாவற்காடு சந்தி குளப்பிட்டிவீதி, காக்கைதீவு, குளப்பிட்டி - ஆனைக்கோட்டைவீதி, நவாலி, வராகி கொக்குவில் மேற்கு

2021-12-19 08:30-17:00
முகாமைத்துவபீடம், மருத்துவபீடஅரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், மருத்துவபீடம், அச்சுகூடம் கே.கே.எஸ்வீதி, கொக்குவில், மாவடி -திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படிகொக்குவில், சைலோ -கோயில் வீதி, ஞானபாஸ்கரோதயா வீதி, இலங்கநாயகி, கட்டப்பிராய், இருபாலை, கோப்பாய், கோப்பாய் கைதடி வீதி, கோப்பாய்மானிப்பாய் வீதி, மாதாகோவில் (கோப்பாய்), கோப்பாய் பயிற்சி கல்லூரி, பால் பண்ணை சந்தி இராஜ வீதி, பூதர்மடம், வசந்தபுரம்

2021-12-26 08:30-17:00
வெளிவாரி பட்டப்படிப்புகள் நிலையம், திண்ணை விடுதி, கொமர்ஷல் வங்கி - பலாலிவீதி, பனிக்கர்லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையர் கோவிலடி, திருநெல்வேலி- சந்தை

2021-12-29 08:30-17:00
மாப்பியன்.சுதுமலை

### பருத்தித்துறை

2021-12-02 08:30-17:00
எஸ்.எஸ் கட்டிடம், கல்லூரி வீதி தம்பசிட்டி, கிராமக்கோடு, பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச்சபை , பருத்தித்துறை சந்தை, சாலம்பை, சாரையடி, சிவன், தம்பசிட்டிசந்தி, வி.எம். வீதி, விஸ்வகுல வீதி

2021-12-04 09:00-17:00
சுப்பர் மடம் ஐஸ்தொழிற்சாலை, மந்திகை மருத்துவமனை, தொலைத் தொடர்பு நிலையம் மாலு சந்தி, இலகடி, இன்பருட்டி, காந்தியூர், மாலு சந்தி, மந்திகை அம்மன் கோவில், அல்வாய், நாவலடி , ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரி மூலை, திக்கம், தேவரையாழிவதிரி, மனோகரா, வதிரிஅரசடி, கட்டைக்காடு 55ம் பிரிவு இராணுவமுகாம், ஆழியவளை, கட்டைகாடு, கட்டைகாடு இராணுவ முகாம் (55ம்பிரிவு), கேவில், முள்ளியான், உடுத்துறை, வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவமுகாம், வெற்றிலைக்கேணி கடற்படைமுகாம்

2021-12-14 08:30-17:00
கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை, 3 வதுகுறுக்கு தெரு, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, மாத்தனை, நெல்லண்டை - வல்லிபுரம் கோவில் பருத்தித்துறை வீதி, புனிதநகர், சிவபிரகாசம்

### வேலணை

2021-12-08 08:30-17:00
சுருவில் - ஊர்காவற்துறை

## கிளிநொச்சி

### கிளிநொச்சி

2021-12-05 08:30-17:00
ரூபவாஹினி - கொக்காவில்

2021-12-07 08:30-17:00
தர்மகேணி தென்னை ஆராய்ச்சி மையம், தம்பகாமம், தர்மகேணி

2021-12-07 10:00-12:00
ஸ்கந்தபுரம் எஸ்.ஆர் அரிசி ஆலையடி, அக்கராயன் பாடசாலையடி, கண்ணகிபுரம், ஸ்கந்தபுரம், விநாயகர்குடியிருப்பு

2021-12-11 09:00-17:00
அரசர்கேணி, இத்தாவில், கச்சார்வெளி, முகமாலை

2021-12-12 08:30-17:00
இராணுவ ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சி வைத்தியசாலை, கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், நெற் களஞ்சியசாலை, விக்ரமரத்ன (பிறைவேற்) லிமிடெட், ஆனந்தபுரம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை, பாரதிபுரம், இலங்கைமின்சாரசபை உபமின் நிலையம், கனகாம்பிகைக்குளம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம்

2021-12-19 09:00-17:00
நன்னீர மீன் உற்பத்தி நிலையம், இரணைமடு விமானப்படை, வட்ட க்கச்சி பண்ணை, கறுப்பிக்குளம், கோவிந்தங்கடைசந்தி, மாயவனூர், பன்னங்கண்டி, இராமநாதபுரம், சின்ச்சந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி

2021-12-26 09:00-17:00
இயக்கச்சி இராணுவமுகாம், பாரம்பரிய விவசாயபண்ணை, விநாயகபுரம் - இயக்கச்சி

### மாங்குளம்

2021-12-16 08:30-17:00
கனகராயங்குளம் சந்தி, ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவமுகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர்கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர்கிராமம், விக்னகுளம்

2021-12-28 08:00-17:00
வன்னிவைரம், பொன்னகர்பூவரசங்குளம், விநாயகபுரம்

### முல்லைத்தீவு

2021-12-04 09:00-17:00
11 இ.எஸ்.ஆர்இராணுவமுகாம், 12 சி.எல்.ஐஇராணுவமுகாம், 16 இ.எஸ்.ஆர் இராணுவமுகாம், 59ம்பிரிவுஇராணுவமுகாம், 6 வதுஎஸ்.எல்.ஏ.எஸ்.சி இராணுவமுகாம், வற்றாப்பளை விமானப்படைமுகாம் I & II, வற்றாப்பளை இராணுவமுகாம் எரிபொருள் நிரப்புநிலையம், எஃப்.எம்.ஏ (எம்.எல்.டி) இராணுவமுகாம் நந்திக்கடல், ஹைட்றாமணி, வற்றாப்பளை விசேட அதிரடிப்படை தலைமையகம், வற்றாப்பளை, கேப்பாப்புலவு, முள்ளியவளை, பிலாக்குடியிருப்பு

2021-12-12 09:00-17:00
புதுக்குடியிருப்பு 682 படைப்பிரிவுஇராணுவப்படைமுகாம், ஹைட்றாமணி, இரணைப்பாலை, கைவேலி (மருத்துவமனை), கோம்பாவில்புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்புமருத்துவமனை, புதுக்குடியிருப்புபொலிஸ்நிலையம், திம்பிலி

## வவுனியா

### மடு

2021-12-02 08:30-17:00
கற்கடந்தகுளம், குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்-மணியர்குளம்

2021-12-03 08:30-17:00
குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள்புதுக்குளம்-மணியர்குளம்

2021-12-06 08:30-17:00
குருக்கள்புதுக்குளம்-மணியர்குளம்

2021-12-07 08:30-17:00
குருக்களூர் மன்னார் வீதி

2021-12-08 08:30-17:00
குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள்புதுக்குளம்-மணியர்குளம், மணியர் குளம் (வீட்டுத்திட்டம்), நித்தியநகர், பெரிய உளுக்குளம் தீவரகம, ரங்கீத்கம, சங்கராபுரம், துடாரிக்குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு, வாரிக்குடியூர், ரோட்மண்ட்ஸலக்ட்ரோஸலக்ட்ரிக்கல்

2021-12-10 08:30-17:00
குருக்கள்புதுக்குளம்-மணியர்குளம்

2021-12-15 08:30-17:00
குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள்புதுக்குளம்-மணியர்குளம், முகத்தாங்குளம் 1 வது பண்ணை

2021-12-16 08:00-17:00
இரணையிலுப்பைக்குளம், ஹப்ப் நகரம், இரணையிலுப்பை குளம், காக்கையங்குளம், கங்கானிகுளம், கீரிசுட்டான், கோவில்புளியங்குளம் (மடு), மதீனாநகர் காக்கையங்குளம், முள்ளிக்குளம் திட்டம், முள்ளிக்குளம் திட்டம், பரசங்குளம் (மடு, துணுக்காய்வீதி), சின்னவலயங்கட்டு, விளாத்திகுளம் (எம்.என்), குருக்கள்புதுக்குளம்-மணியர்குளம், குருக்களூர் மன்னார் வீதி, முகத்தாங்குளம் 1 வது பண்ணை

2021-12-28 08:30-16:00
இரணையிலுப்பைக்குளம், ஹப்ப் நகரம், இரணையிலுப்பைகுளம், காக்கையங்குளம், கங்கானிகுளம், கீரிசுட்டான், கோவில் புளியங்குளம் (மடு), மதீனாநகர் காக்கையங்குளம், முள்ளிக்குளம் திட்டம் , முள்ளிக்குளம் திட்டம் , பரசங்குளம் (மடு, துணுக்காய் வீதி), சின்னவலயங்கட்டு, விளாத்திகுளம் (எம்.என்)

### மன்னார்

2021-12-04 09:00-16:00
அச்சங்குளம், அடம்பன், அகத்திமுறிப்பு, அகத்திமுறிப்புதிட்டம், அளவக்கை, அளவக்கை சிறுகுளம்திட்டம், ஆண்டாங்குளம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல், ஆத்திமோட்டை, அறுகுக்குன்று நொச்சிக்குளம், ஆத்திக்குழி, ஆவணம் வஞ்சியங்குளம், செம்மண்தீவு, இலந்தைமோட்டை, எருவிட்டான், ஹனைஸ்நகர், இத்திக்கண்டல், கண்ணாட்டி, கரடிக்குழி, கறுக்காய்குளம், காயக்குழிதிட்டம், கொக்குப்படையான், கொண்டச்சிதிட்டம், கொண்டச்சி நீர்வழங்கல் சபை, கொண்டச்சிசிங்களகிராமம், கூளாங்குளம், கூழாங்குளம்திட்டம் (ஜீநாத்நகர்), குருவில், மடுக்கரை, மணல்குளம், மணற்குளம், மாந்தைசந்தி (திருக்கேதீஸ்வரம்கிராமம்), மறிச்சுக்கட்டி, மருதமடு, மாதோட்டம், மாவிலங்கேணி, மேதன்வெளி, மினுக்கன், முள்ளிக்குளம், முருங்கன், முருங்கன்பிட்டி, முசலிதேசியபாடசாலையடி, நாகத்தாழ்வு, நானாட்டான், நறுவிலிக்குளம், நானாட்டான்பிரதேசசெயலக அலுவலகத்தடி, நெடுங்கடல் மொபிட்டல் கோபுரம், பெரியபொள்ளாச்சி பொற்கேணி, பாலைக்குழி, பாலைக்குழிதிட்டம், பாலைப்பெருமாள்காடு (மணல்மோட்டை), பள்ளகாமம், பள்ளங்கோட்டை, பளிவாசல்பிட்டி, பாப்பைமோட்டை, பரப்பாங்கண்டல், பரப்புக்கடந்தான், பரிகாரிக்கண்டல், பெரியநீலாச்சேனை, பெரியபொள்ளாச்சிபொற்கேணி (பண்டாரவெளி), பிச்சைகுளம், பிச்சைவாணிபங்குளம்திட்டம், பிடாரிக்குளம், பொன்தீவுகண்டல்கள்ளிமோட்டைபுளியங்குளம், பொன்னாச்சிகுளம், பூவரசங்குளம், புதுக்காமம்கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சிபொற்கேணிதிட்டம், சாளம்பன்நாகச்செட்டி, சிலாவத்துறை, சூரியகட்டைக்காடு, சொர்ணபுரி, சின்னபொள்ளாச்சிபொற்கேணி, தம்பட்டமுசலி, திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மருத்துவமனை, உடமணகரி, உயிர்த்தராசங்குளம், வட்டக்கண்டல், வாழ்க்கைப்பட்டாங்கண்டல், வண்ணமோட்டைசந்தி, வெள்ளிமலை, அடம்பன்நீர்வழங்கல்சபை, சி.இ.சி.பி (சிலாவத்துறை), சிலாவத்துறைகடற்படைமுகாம், டொன்பொஸ்கோ, செம்மண்தீவுநீர்வழங்கல்சபை, செம்மண்தீவுநெற்களஞ்சியம், இறால்பண்ணை, பள்ளமடு, நீர்வழங்கல், முருங்கன், லைவ்ஸ்டாக்ப்ரீடர்ஸ்கோப்சொசைட்டி, செம்மண்தீவு

2021-12-05 08:30-17:00
கொன்வென்ட்வீதி, மன்னார்நகரம், மன்னார்நகரம்இலங்கைமின்சாரசபையடி, மூர் வீதி, நளவன்பாடிபுதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர்சேவைமையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா டெலிகாம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சிமைதானம், மன்னார், ஆவேமரியாஐஸ்தொழிற்சாலை, கச்சேரிவளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், கார்கில்ஸ்பூட்சிட்டி, மன்னார்

2021-12-11 08:30-17:00
கொன்வென்ட்வீதி, மன்னார்நகரம், மன்னார்நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர் வீதி, நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்காடெலிகாம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சிமைதானம், மன்னார், ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, கச்சேரிவளாகம், மன்னார் நீர்வழங்கல் சபை, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ்பூட்சிட்டி, மன்னார், எழுத்தூர், எமில்நகர், கொன்னையன் குடியிருப்பு, மாலுவாடிசந்தி, சனிகிராமம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம்திட்டம், எருக்கலம்பிட்டிநீர்வழங்கல்திட்டம், மன்னார் மருத்துவமனை, கடற்படைமுகாம், ஓலைத்தொடுவாய், புதியசில்க்ரோடு அகுடிக் கம்பெனிபிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவு களஞ்சியம்), நீர்வழங்கல் - தோட்டக்காடு, இலங்கை போக்குவரத்து சபை மன்னார்

2021-12-30 08:30-17:00
ஆத்திமோட்டை

### வவுனியா

2021-12-04 09:00-17:00
ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், எல்லப்பர் மருத்தங்குளம் கோவிலடி, கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங் குளம்மாதா கோவிலடி, மகாமயிலங்குளம், மகாமயிலங்குளம், மதுரநகர்கல் நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம்

2021-12-07 08:00-17:00
கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், சாந்தசோலை, பூ - ஓயா, ஈரப்பெரியகுளம் இராணுவமுகாம், கவுனூம் ஆடைதொழிற்சாலை, குருந்துபிட்டிய, தேசிய இளைஞர் பயற்சி முகாம், அழகல்ல (தீருவேகம), அனுத்கம, ஈரற்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தடி, ஈரப்பெரியகுளம், கல்குண்டாமடு, மூன்றுமுறிப்பு, நவகம, பகலஅனுத்வத்த, புபுதுகம, வேரகம, குட்சட்வீதி, பண்டாரிக்குளம், சேவாலங்கா - தவசிக்குளம், சிவன்கோவிலடி தோணிக்கல், தவசிக்குளம், தவசிக்குளம பிள்ளையார் வீதியடி, தவசிக்குளம், தோணிக்கல் - லக்ஸபனாவீதி, நீர்வழங்கல் (மதவுவைத்தகுளம்), குளோப்அரிசிஆலை

**2021-12-08** 08:00-17:00
கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், மருதோடை, ஓமந்தை, நம்பாங்குளம், நாவற்குளம், அரவுந்தலாவ-2 , அறுகம்புல்வெளி, அவுறந்துலாவ, அவுறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக், கூமாங்குளம்சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக் குளம் , நாகர்இலுப்பைகுளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னகுளம், பாவற்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல்தோட்டம்வீட்டுத்திட்டம், சூடுவெந்தபுலவு, ட்ராக் 07, பாவற்குளம், விநாயகபுரம்வீட்டுத்திட்டம், நெளுங்குளம்நீரவழங்கல்சபை

**2021-12-09** 08:00-17:00
கூமாங்குளம் கிருஷ்ணா மெடிகிளினிக்

**2021-12-14** 08:00-16:00
வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலடி, நெடுங்குளம் சூரியமின உற்பத்தி நிலையம், மறக்கறம்பளை - கனேசபுரம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை - காத்தான் கோட்டம்.

**2021-12-15** 08:00-17:00
வைரவபுளியங் குளம் ஆதிவிநாயகர் கோவிலடி

**வவுனியா**

**2021-12-16** 08:00-17:00
ஈச்சங்குளம், ஈச்சங்குளம்கல்லறை, ஈஸ்வரிபுரம், கல்மடு, கருவேப்பங்குளம், கற்குளம் (சாஸ்திரிகூழாங்குளம்), கிடாச்சூரி, கோதாண்டர்நொச்சிக்குளம், மணிபுரம், மணிபுரம்வீட்டுத்திட்டம், மறக்கறம்பளை (அபிராமிஆலை), மறவாங்குளம், புதியபேரூந்துநிலையம், பத்தினியார்மகிழங்குளம், பூம்புகார், சமயபுரம், சாஸ்திரிகூழாங்குளம், சோயாவீதி, தாண்டிக்குளம், சுந்தரபுரம், தாண்டிக்குளம், தரணிக்குளம், திருநாவற்குளம், வடக்குபண்ணை, சமயபுரம்-வரன்அரிசிஆலை, தாண்டிக்குளம்நீரவழங்கல், நீரவழங்கல் - புதுக்குளம், நீரவழங்கல் - புதுக்குளம், மறக்கறம்பளை (பயிற்சிநிலையம்), வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலடி, அறுகம்புல்வெளி, குருமன்காடு பிள்ளையார் கோவிலடி, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குகன் நகர், குழுமாட்டு சந்தி, குருமாங்காடு, குருமாங்காடு கோவில் வீதி, மறக்கறம்பளை - கனேசபுரம், நாகரிலுப்பைக்குளம் , நாகர் இலுப்பைகுளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பட்டைகாடு, வேப்பங்குளம் 6 வது வீதி, பட்டாணிச்சூர் புளியங்குளம், பொன்னாவரசங்குளம், வைரவபுளியங்குளம், வைரவபுளியங்குளம், அல்வி அரிசி ஆலை , ஜீவன் அரிசி ஆலை, ஸ்ரீ ரங்கன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை - காத்தான் கோட்டம், தெய்வேந்திரம் அரிசி ஆலை, யு.என்.எச்.சி.ஆர் - குருமாங்காடு, அரசன் அரிசி ஆலை, வேப்பங்குளம், சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை), காத்தர்சின்னகுளம்பூந்தோட்டம்மகாறம்பைக்குளம், அரவுந்தலாவ - 2 , அறுகம்புல்வெளி, அவுறந்துலாவ, அவுறந்துலாவ, நவகம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம்கிருஷ்ணாமெடிகிளினிக், கூமாங்குளம் சாய்சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக் குளம் , நாகர் இலுப்பைகுளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண்சின்னகுளம், பாவற்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல்தோட்டம் வீட்டுத்திட்டம், சூடுவெந்தபுலவு, ட்ராக் 07, பாவற்குளம், விநாயகபுரம்வீட்டுத்திட்டம், நெளுங்குளம்நீரவழங்கல்சபை

**2021-12-20** 08:30-17:00
ஆசிக்குளம்

**2021-12-21** 08:00-17:00
கூமாங்குளம்சாய்சிறுவர்இல்லம், வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலடி, அறுகம்புல்வெளி, குருமன்காடு பிள்ளையார் கோவிலடி, கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குகன் நகர், குழுமாட்டு சந்தி, குருமாங்காடு, குருமாங்காடு கோவில் வீதி, மறக்கறம்பளை - கனேசபுரம், நாகரிலுப்பைக்குளம் , நாகர் இலுப்பைகுளம், நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பட்டைகாடு, வேப்பங்குளம் 6 வது வீதி, பட்டாணிச்சூர் புளியங்குளம், பொன்னாவரசங்குளம், வைரவபுளியங்குளம், வைரவபுளியங்குளம், அல்வி அரிசி ஆலை , ஜீவன் அரிசி ஆலை, ஸ்ரீ ரங்கன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை - காத்தான் கோட்டம், தெய்வேந்திரம் அரிசி ஆலை, யு.என்.எச்.சி.ஆர் - குருமாங்காடு, அரசன் அரிசி ஆலை, வேப்பங்குளம், சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை), அளுத்வத்த, ஆசிக்குளம், போகஸ்வேவா, போகஸ்வேவா, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம, சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, ஆசிக்குளம்

**2021-12-22** 08:00-17:00
கூமாங்குளம்சாய்சிறுவர்இல்லம், பட்டைகாடு, வேப்பங்குளம் 6 வதுவீதி

**2021-12-23** 08:00-17:00
கூமாங்குளம்சாய்சிறுவர்இல்லம், ஆசிக்குளம்

**2021-12-24** 08:30-17:00
ஆசிக்குளம்

**2021-12-28** 08:00-17:00
மறக்கறம்பளை - கனேசபுரம், சமயபுரம், ஈச்சங்குளம் கல்லறை, ஈஸ்வரிபுரம், கல்மடு, கருவேப்பங்குளம், கற்குளம் (சாஸ்திரிகூழாங்குளம்), கிடாச்சூரி, கோதாண்டர் நொச்சிக்குளம், மறவாங்குளம், பூம்புகார், தரணிக்குளம்

**2021-12-29** 08:00-17:00
கச்சேரி, சாந்தசோலை

பிரதிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்) இலங்கை மின்சார சபை
பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**வளமான வாழ்விற்கு மின்சாரம்...**

**நீங்கள் இப்போது உங்கள் மின்சாரக் கட்டணங்களை www.ceb.lk மூலம் செலுத்தலாம்**

### -மாகாணசபை தேர்தலில் தனித்த பயணம்-

# ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி இந்த வாரம் அவசர சந்திப்பிற்கும் ஏற்பாடு




ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு, அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து ஆராயவும், கட்சியை பலப்படுத்தும் அடுத்த நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவும் அவசர சந்திப்பொன்றை ஏற்பாடு செய்துள்ளதுடன், அடுத்த மாகாணசபை தேர்தலில் தாம் தனித்து களமிறங்க ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் கூட்டமொன்று கடந்த வாரம் கூடிய வேளையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அதன் போது ஆராய்ந்துள்ளனர்.

எனினும் கடந்த பாராளுமன்ற அமர்வின் போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக ஆளும் பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் செயற்பட்ட விதம் குறித்தும், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை இலக்கு வைத்து தொடர்ச்சியாக தாக்கப்படுகின்ற நிலையில் கட்சியை பலப்படுத்த எடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்தும் ஆராயவும் அடுத்த வாரம் மீண்டும் அவசர சந்திப்பொன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அவரது கொழும்பு இல்லத்தில் கூடவுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தில் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு இருக்கும் செல்வாக்கு என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அதற்காக அடுத்த மாகாணசபை தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தனித்து களமிறங்க வேண்டும் எனவும் கட்சியின் பெரும்பான்மை தரப்பினர் கட்சி தலைமையிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அதனை கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மறுக்கவில்லை எனவும், அடுத்த மாகாணசபை தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தனித்து களமிறங்குவது உறுதியெனவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளரும் முன்னாள் செயலாளருமான ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தகவல் தெரிவித்தார்.

# சீரற்ற காலநிலையால் 24,628 பேர் பாதிப்பு



கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் நிலவும் வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட சீரற்ற காலநிலை காரணமாக குறைந்தது 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

6954 குடும்பங்களைச் சேர்ந்த 24628 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று திங்கட்கிழமை காலை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பாதகமான வானிலை காரணமாக 3 வீடுகள் முழுமையாகவும், 83 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

சுமார் 793 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 14 மாவட்டங்களை சேர்ந்த பகுதிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

# புதிய பரீட்சை ஆணையாளர் கடமைகளை பொறுப்பேற்றார்



புதிய பரீட்சை ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள எல்.எம்.டி. தர்மசேன இன்று தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

பெலவத்தவிலுள்ள பரீட்சைகள் திணைக்கள வளாகத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் புதிய ஆணையாளர் நாயகம் நேற்று திங்கட்கிழமை காலை சுப வேளையில் கடமைகளை ஆரம்பித்தார்.

கல்வி அமைச்சின் பாடசாலை விவகாரங்களுக்கான மேலதிக செயலாளராக இருந்த எல்.எம்.டி. தர்மசேன, கொழும்பில் உள்ள ஆனந்த மற்றும் மஹாநாம கல்லூரிகளின் அதிபராகவும், இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொடிபதி கப்ரக
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
A 13 22 38 66
சீட்டிழுப்பு வாரம் 771 | வர்ணம் மஞ்சள்
திகதி 2021. 11. 28 | ஞாயிற்றுக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,844,400/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,192,620/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1403
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2021.11.28
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,222,400/-
வெற்றி இலக்கங்கள்
23 47 51 61
ஆங்கில எழுத்து M
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.11.28
சீட்டிழுப்பு இல: 3738
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,984,260/-
வெற்றி இலக்கங்கள்
07 11 22 44
ஆங்கில எழுத்து O
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## சிறு விளம்பரம்

**தேவை**

O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 076 8974925, 077 1661476

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1577 | நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2021.11.28 | தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
G 32 33 38 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,344,920/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-11-28
வெற்றி வாரம் : 3289
வர்ணம் : ஊதா
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது.
ரூ. 2,544,171/-
வெற்றி இலக்கங்கள்
09 19 22 33
தனுசு
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,921,071/-

# ஓமிக்ரான் உருமாறிய கொரோனாவினால் தமிழகம் வரும் விமானப் பயணிகளுக்கு மிக இறுக்கமான கட்டுப்பாடுகள்



ஓமிக்ரொன் உருமாறிய கொரோனாவினால், அதிக ஆபத்தான 12 நாடுகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தரும், சர்வதேச விமானப் பயணிகளுக்குத் தமிழ்நாடு சுகாதாரத் துறை பல புதிய கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது. கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாறிக் கொண்டேயிருப்பது பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது. ஆல்பா, டெல்டா போன்ற உருமாறிய கொரோனா வைரஸ்கள் தான் முந்தைய அலைகளை ஏற்படுத்தின. இதனால், உருமாறிய கொரோனா வைரஸ்களை உலக நாடுகள் எச்சரிக்கையுடனேயே கையாள்கின்றன. இந்தச் சூழலில், கடந்த சில நாட்களுக்கு முன்னர்; தென்னாபிரிக்காவில் புதிய உருமாறிய கொரோனா கண்டறியப்பட்டது. ஓமிக்ரொன் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புதிய உருமாறிய கொரோனா, அதிக மாறுபாடுகளைக் கொண்டிருப்பதனால், இது மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாமென அஞ்சப்படுகின்றது. உலக சுகாதார அமைப்பும், இதனை ஆபத்தான கொரோனா வகையாகப் பட்டியலிட்டுள்ளது. இந்த உருமாறிய கொரோனாவினால் பிரிட்டன், இஸ்ரேல் உள்ளிட்ட பல நாடுகளும் தென் ஆபிரிக்காவுடனான விமான போக்குவரத்திற்குப் பல புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

ஓமிக்ரொன் கொரோனாவின் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த மாநில அரசாங்கங்கள் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, மத்திய அரசு அறிவுறுத்தியிருந்தது. இந்தச் சூழலில் அதிக ஆபத்தான 12 நாடுகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சர்வதேச விமான பயணிகளுக்குப் பல புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன், தென்னாப்பிரிக்கா, பிரேசில், பங்களாதேஷ், பொட்ஸ்வானா, சீனா, மொரீஷியஸ், நியூசிலாந்து, ஸிம்பாப்வே, சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் இஸ்ரேல் ஆகிய ஆபத்தான நாடுகளிலிருந்து வருவோருக்கு இந்தப் புதிய கட்டுப்பாடுகள் பொருந்துமென தமிழ்நாடு பொதுச்சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இந்த நாடுகளிலிருந்து வரும் பயணிகள், பயணத்தைத் தொடங்கும் முன்னர், கொரோனா எதிர்மறைச் சான்றிதழை சமர்ப்பித்திருக்க வேண்டும். தமிழகத்திற்கு வந்த பின்னரும் விமான நிலையத்திலேயே கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் 7 நாட்கள் கட்டாய தனிமைக்குப்படுத்தல், 8ஆம் நாள் மீண்டும் கொரோனா பரிசோதனை செய்யப்படும்.

அதிலும், கொரோனா எதிர்மறையென முடிவு வந்த பின்னர், அடுத்த 7 நாட்களுக்கும் அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.மேலும், வெளிநாடுகளில் இருந்து வருவோர்களில் யாருக்காவது கொரோனா பாதிப்பு இருக்கும் பட்சத்தில், மரபணு வரிசைப்படுத்துதல் சோதனைக்காக, அவர்களின் மாதிரிகள் அனுப்பப்படும் எனவும், அதுவரை அவர்கள் தொடர் கண்காணிப்பில் வைக்கப்படுவார்களென்றும், அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும் தனிமைப்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழகம் வேலூரில் நில அதிர்வு




தமிழகம் வேலூரிலிருந்து தென்மேற்குத் திசையில், 59 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று அதிகாலை நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

நில அதிர்வினால், பொது மக்கள் பீதியில் உறைந்திருக்கிறார்கள். நிலநடுக்கம் அல்லது பூகம்பம் என்பது பூமிக்கடியில் அழுத்தம் அதிகமாகி, அதனால் சக்தி வெளியேற்றப்படும் போது, தளத்தட்டுகள் நகர்வதனால், இடம்பெறும் அதிர்வைக் குறிக்கும்.இதனை, டெக்டானிக் தட்டுகள் என்றும் கூறமுடியும்.

இந்த அதிர்வு நிலநடுக்கமாக இருக்கும் பட்சத்தில், ரிச்டர் அளவை மூலம் அளவிடப்படுகின்றன. 3 ரிச்டருக்கும் குறைவான நிலநடுக்கங்களை உணர்வது கடினமாகும். அதே வேளை, 7 ரிச்டருக்கும் கூடுதலான அதிர்வுகள், பலத்த சேதத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

வேலூரில் நேற்று அதிகாலை 4.17 மணிக்கு 3.6 ரிச்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், யாருக்கும் எந்தப் பாதிப்பும் இருக்காதென,தமிழக பேரிடர் மேலாண்மைத்துறை அறிவித்திருக்கிறது.

நில அதிர்வினால், பாதிப்புக்கள் ஏதேனும் ஏற்பட்டதாவென, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில அதிர்வினால், மக்கள் பெரும் அச்சத்தில் வீடுகளை விட்டு சாலைகளில் ஒன்று கூடினார்கள். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# நளினியின் மனுவைத் தள்ளுபடி செய்க பதில் மனுவைத் தாக்கல் செய்தது தமிழக அரசு




முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள ஏழு பேரின் விடுதலை குறித்த தமிழக அரசின் தீர்மானத்திற்கு ஆளுநரின் ஒப்புதலுக்கு காத்திருக்காமல் தன்னை விடுதலை செய்யக் கோரி, நளினி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென, சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழக அரசு பதில் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

நளினி, முருகன் உட்பட ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கான 2018 தமிழக அரசு தீர்மானத்தின் மீது, ஆளுநர் எந்த முடிவையும் எடுக்காதமையினால், தம்மை விடுதலை செய்யக்கோரி, நளினி இந்த வழக்கை தொடர்ந்தார்.

இதற்கு பதில் மனுவைத் தாக்கல் செய்துள்ள தமிழ்நாடு அரசு, தண்டனைக் குறைப்புத் தொடர்பாக, குடியரசுத் தலைவர் தான் முடிவெடுக்க தகுதியானவர் எனக் கூறி, அது தொடர்பில், ஆளுநர் மத்திய அரசிற்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

# பிரசவ வலியுடன் சைக்கிளில் சென்று குழந்தை பிரசவித்த பெண் எம்.பி





நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரொருவர், பிரசவ வலியுடன் சைக்கிளில் சென்று, குழந்தை பிரசவித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நியூசிலாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜூலி அன்னே ஜெண்டர் (Julie Anne Gender) 41 வயதான இவர் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தார். இந்த நிலையில் நேற்று அதிகாலை அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது. இந்நிலையில், அவரது வீட்டிலிருந்து சிறிது தொலைவிலேயே வைத்தியசாலை இருப்பதனால், அவர் தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு வைத்தியசாலைக்கு புறப்பட்டார். அங்கு சென்ற 10 நிமிடத்திலேயே அவருக்கு பெண் குழந்தை பிறந்த நிலையில் தாயும், சேயும் தற்போதும் நலமாக உள்ளனர்.

இதேவேளை பிரசவ வலியோடு சைக்கிளில் வைத்தியசாலைக்கு சென்று குழந்தை பெற்றெடுத்தது குறித்து, ஜூலி முகநூல் பதிவொன்றை வெளியிட்டார்.

அதில் முக்கியமான செய்தி இன்று அதிகாலை 3.04 மணியளவில் எங்கள் குடும்பத்தின் புதிய உறுப்பினரை நாங்கள் வரவேற்றுள்ளோம். பிரசவத்தின் போது சைக்கிள் ஓடுவதற்கு உண்மையிலேயே நான் திட்டமிடவில்லை.ஆனால், அப்படி நடந்து முடிந்துவிட்டது. ஆச்சரியப்படும் விதமாக இப்போது எங்களிடம் நல்ல ஆரோக்கியமான, மகிழ்ச்சியான குழந்தை உள்ளது. அவளின் தந்தையைப் போலவே அவள் இருப்பதாகவும் ஜூலி குறிப்பிட்டுள்ளார்.

# கடன் பொறியினால் சீனா வசமாகும் உகண்டாவின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையம்





சீனாவின் கடன் பொறி நுட்பத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் உகாண்டா விரைவில் சேரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.நாட்டின் ஒரே ஒரு சர்வதேச விமான நிலையமான என்டெபே சர்வதேச விமான நிலையம், சீனா கையகப்படுத்தும் அபாயத்திலுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு, சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (எக்ஸிம் வங்கி), 207 மில்லியன் டொலர்களை விநியோகத்தின் போது, 2 சதவீத வட்டி வீதத்தில் உகண்டாவிற்கு வழங்கியது.

என்டெபே விமான நிலையத்தின் மேம்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட கடனில், 20 வருட திருப்பிச் செலுத்தும் அட்டவணை மற்றும் ஏழு வருட கால அவகாசம் ஆகியவை அடங்கும். இந்நிலையில், கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் உகாண்டா அரசாங்கம் திணறி வருவதனால், என்டெபே சர்வதேச விமான நிலையம் மற்றும் பிற உகாண்டா சொத்துக்கள், சீனா வசம் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஜனாதிபதி யோவேரி முசெவேனி ஒரு தூதுக்குழுவை பெய்ஜிங்கிற்கு அனுப்பியுள்ளார். சீன அதிகாரிகள் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்க மறுத்ததனால்,இந்த விஜயம் பயனற்றுப் போனது.உகாண்டாவின் நிதியமைச்சர் மதியா கசைஜா, கடந்த வாரம் 207 மில்லியன் டொலர்கள் கடனை தவறாகக் கையாண்டமைக்காக நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கோரியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வங்கக் கடலில் உருவாகும் புதிய தாழமுக்கம் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை



வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி இன்று உருவாகுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை ஆரம்பமானதிலிருந்து,தமிழ்நாட்டை இரண்டு தாழ்வுப் பகுதிகள் தாக்கிவிட்டன. 2 வாரத்திற்கு ஒரு தாழ்வுப் பகுதி என்று கணக்கு வைத்துப் 4 வாரத்தில் இரண்டு தாழ்வு பகுதிகள் தாக்கி மோசமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. அதிலும், அந்தமான் அருகே உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, சென்னைக்கு அருகே காரைக்கால் ஸ்ரீ ஹரிகோட்டா இடையே கரையைக் கடந்தது.

தற்போது வளிமண்டல மேலடுக்கு சுழற்சியினால், மழை பெய்து வருகின்றது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சியானது, வங்கக்கடலில் நிலைகொண்டுள்ளது. இதனால், வங்கக்கடல் அருகேயுள்ள தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் அனைத்திலும், மழை பெய்து வருகின்றது. சென்னை முதல் குமரிவரையான பிரதேசத்தில், விட்டு விட்டு பரவலாக மழை பெய்து கொண்டு இருக்கிறது.

இந்த நிலையில், வங்கக்கடலில் இன்று புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகுவதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. உண்மையான கணிப்பீடுகளின் அடிப்படையில், இந்த தாழ்வுப் பகுதி நேற்றே உருவாகியிருக்க வேண்டும்.

ஆனால், வங்கக்கடலில் நிலவிய குறைவான வெப்ப நிலையினால், இந்த தாழ்வுப் பகுதி உருவாகுவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால்,இன்றே இது உருவாகின்றது. கணித்தபடியே தெற்கு அந்தமான் கடற்பகுதியில், புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழத்த தாழ்வுப் பகுதி உருவாகியதன் பினனர், மேற்கு வடமேற்கு திசையில் ஆந்திரா நோக்கி நகரும் வாய்ப்புகள் அதிகமாகத் தென்படுகின்றன.

இது தொடர்ந்து வலுப்பெறும் பட்சத்தில், ஆந்திராவை புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தாக்கும். ஒருவேளை வலிமை அடையாமல் வலிமை குறைந்து நகர்ந்தால், வடதமிழ்நாட்டை தாக்குமென்று, கணிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 72 மணி நேரத்திற்கு இது தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் வாய்ப்புக்கள் குறைவாகும். அதன்பின் இது தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் வாய்ப்பும் இருப்பதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இப்போதைக்கு இது தமிழ்நாட்டை தாக்கும் வாய்ப்புக் குறைவாக இருந்தாலும், போகப், போகவே இதன் சரியான பாதை கணிக்கப்படுமென்பது, குறிப்பிடத்தக்கது.

# நெதர்லாந்து விமான நிலையத்தில் வந்திறங்கிய 13 பேருக்கு ஓமிக்ரொன் கொரனா தொற்று



தென்னாபிரிக்காவிலிருந்து நெதர்லாந்திற்குச் சென்ற 13 பேருக்கு, புதிய கொரோனா வைரஸ் திரிபான ஓமிக்ரொன் பாதிப்புக் கண்டறியப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவிலிருந்து இரண்டு விமானங்களில் நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமுக்குச் சென்ற 61 பயணிகளில், 13 பேருக்கே ஓமிக்ரொன் பாதிப்பிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, இத்தாலி மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் புதிய திரிபான ஓமிக்ரொன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில்,தற்போது நெதர்லாந்திலும் இந்தப் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கொவிட் தொற்றுகள் மற்றும் புதிய மாறுபாடு குறித்த கவலைகளுக்கு மத்தியில், நெதர்லாந்தில் கடுமையான கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வரவிருக்கும் நிலையில், இந்தப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

விருந்தோம்பல் மற்றும் கலாசார அரங்குகள் மற்றும் வீட்டுக் கூட்டங்களுக்கான வரம்புகள் ஆகியவை இதில் அடங்கும். தென்னாபிரிக்காவிலிருந்து திரும்பியவர்கள் கொவிட் பரிசோதனை செய்து கொள்ளுமாறு, நெதர்லாந்து சுகாதார அமைச்சர் ஹ்யூகோ டி ஜோங்கே அவசர கோரிக்கை விடுத்துள்ளார். நெதர்லாந்தில் அதிக தொற்றுகள் இருப்பதை நினைத்துப் பார்க்க முடியாதென்றும், அவர் கூறினார்.

# பெருவில் பயங்கர நிலநடுக்கம் பழமை வாய்ந்த தேவாலயக் கோபுரம் இடிந்து வீழ்ந்து நாசம்

பெரு நாட்டின் வடக்குப் பகுதியில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலோர நகரமான பராங்காவில் இருந்து 42 கிலோ மீற்றர் வடமேற்கில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 7.4 ஆகப் பதிவாகியது. நிலநடுக்கத்தினால் பாரிய கட்டடங்கள் குலுங்கின. சில கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.

வடக்கு பெருவில் பாதுகாக்கப்பட்ட 400 ஆண்டு பழமையான தேவாலயத்தில் 14 மீற்றர் உயரம் கொண்ட கோபுரம் இடிந்து வீழ்ந்தது. ஈக்வடோரிலுள்ள ஒரு தேவாலயம் சேதமடைந்தது. கொலம்பியாவிலும் சக்தி வாய்ந்த நில அதிர்வு உணரப்பட்டது.

இந்த நிலநடுக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தபோதிலும், மிகவும் ஆழமான பகுதியில், அதாவது 112 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதனால், பெரியளவில் பாதிப்புகளை ஏற்படுத்தவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. நிலநடுக்கங்கள் அதிகம் ஏற்படும், பசிபிக் நெருப்பு வளையப் பகுதியிலேயே, பெரு நாடு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கு வங்கத்தில் கோர விபத்து 18 பேர் பரிதாபமாகப் பலி

மேற்கு வங்க மாநிலம் நடியா மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். இறுதிச் சடங்கின் போது, சடலம் ஒன்றை ஏற்றிச்சென்ற வாகனம் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, லொறியுடன் மோதி விபத்திற்குள்ளானது. குறித்த வாகனத்தில், 35 பேர் சென்றிருந்த நிலையில், 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும், ஏனையோர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு, பிரதமர் நரேந்திர மோடி, உட்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளமை, குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.